பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 11 நவம்பர் 2017 | விதி : 74



மறதி ஒரு மந்திரம்!
அரசியலில் இராஜதந்திரம்




றோஹண விஜயவீர:
பார்க்கப்படாத பக்கங்கள்



அடிமை விலங்கை
உடைத்தவன்



கல்வியங்காடு
புலிகளின் கோட்டை



## கூட்டமைப்பு துரோகம் செய்கிறது

## சுரேஷ் சாடல்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

பாகுபலி படத்திற்குப் பின்னர் அனுஷ்காவின் நடிப்பில் வெளிவரவுள்ள படம் பாஹ்மதி.

தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளில் 125 கோடி இந்திய ரூபா மதிப்பில் தயாராகிறது இப்படம்.

நாயகியை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தின் முதல்பார்வை கடந்த அனுஷ்காவின் பிறந்தநாளன்று வெளியானது.



ச
வைத்து "
இந்
கழிவறை
வெளியா
இத
இடம்பெ
விடாதீர
அந்தக் கா
கேட்டுக்

படத்தி
தொட
சர்ச்சை
இந்நி
அழை
இன்

விஜய் அன்ரனியின் நடிப்பில் உருவாகியிருக்கிறது அண்ணாதுரை படம். இந்தப் படத்தை அவரின் மனைவி பாத்திமா, ராதிகா சரத்குமார் ஆகியோர் இணைந்து தயாரித்தனர்.

தணிக்கை குழு படத்தில் எதையும் தணிக்கை செய்யவில்லை. ஆனால் யு/ஏ சான்றிதழே அளித்துள்ளது. வரும் 30 ஆம் திகதி படம் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய நாளில் சசிகுமாரின் கொடிவீரன், திருட்டுப் பயலே 2 படங்கள் வெளியாகின்றன. ஆனாலும் ,எத்தனை படங்கள் வெளியானாலும் அண்ணாதுரை அன்றைய தினமே வெளியாகும் எனக் கூறப்படுகின்றது.

# கூட்டமைப்பு துரோகம் செய்கிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் இருந்தே அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி அதிலிருந்து வெளியேறுகிறது என்ற அறிவிப்பை அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியிட்டார். தமிழ் மக்கள் மத்தியில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது இந்த அறிவிப்பு. விலகலின் பின்னணி குறித்து அறிய சுரேஷ் பிறேமச்சந்திரனை தொடர்பு கொண்டோம். சந்திப்புக்கு நேரத்தை உடனேயே ஒதுக்கினார். அவர் தந்த நேரத்திலிருந்து நாம் சற்றுத் தாமதித்து விட்டபோதும் காத்திருந்தார். தினமும் அரசியல், கட்சிப் பணிகளுக்குள் தனது தனிப்பட்ட வேலைகளையும் கடமைகளையும் நிறைவேற்ற சுழன்று கொண்டிருக்கும் அவர் எங்களை வரவேற்றார்.

வீட்டின் முகப்பில் கதிரைகளை எடுத்துப் போட்டு வந்து அமர்ந்தார். தேர்தல் சமயத்தில் திடீரென கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளீர்களே என்று விலகலின் பின்னணி குறித்துக் கேட்டோம். உடனயாகவே கூற ஆரம்பித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சியின் பல்வேறுபட்ட நிலைப்பாடு தொடர்பாக நீண்ட காலமாக நாடாளுமன்றத்தில் நான் இருந்தபோதும் - இல்லாதபோதும் நேரடியாகவும், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன். நாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின் ஒற்றுமையே பலம் என்ற கருத்து தமிழ் மக்களிடையே உள்ளது. அது தவறான கருத்தும் அல்ல. ஆனால் நாம் ஒற்றுமையாக செயற்படுவது மாத்திரமல்ல, பலமான சக்தியாக மாறவேண்டும் என்றே முயல்கிறோம். கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிய வேண்டும் - கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

**மக்கள் ஆணையை நிறைவேற்றத் தயாரில்லை**

இந்த நிலையில் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் புதிய அரசமைப்பு திருத்தம் வந்துள்ளது. இதில் தேர்தல் முறை மாற்றம், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது செய்தல், தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு என்பன முக்கியம் பெறுகின்றன. இதில் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமிழ் மக்கள் ஓர் ஆணையை வழங்கியுள்ளனர். கடந்த தேர்தல், மாகாண சபைத் தேர்தல், 2015 நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்கள் முன் நான் உட்பட கூட்டமைப்பினர் சில கோரிக்கைகளை வைத்தோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்தல், தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமைகளை ஏற்றுக் கொண்டு, இதன்அடிப்படையில் சமஷ்டி முறை ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்களுக்கு சுயாட்சி ஏற்படுத்தப்படல் வேண்டும். மக்கள் இதற்குத்தான் ஆணை வழங்கினர்.

**வட, கிழக்கு இணைப்புப் பற்றி பேசவும் தயாரில்லை**

புதிய அரசமைப்பு சாசனம் வருகின்றது. மக்கள் கொடுத்த ஆணையின் பிரகாரம் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தினோமோ என்றால்... இல்லை. ஆனால் புதிய அரசமைப்பு சாசனத் தயாரிப்பில் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். எங்களுடைய கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பது இல்லாத சூழ்நிலையில் - எந்தவிதமான பேச்சும் நடதப்படாத ஒரு சூழ்நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிகாட்டல் குழுவில் - உப குழுக்களில் உள்ளனர். சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் நாடாளுமன்றில் உரையாற்றிய பிரதமர் வலுதெளிவாக சொல்கிறார். '78 முறை இந்த வழிகாட்டல் குழு கூடிப் பேசியிருக்கிறது. இதில் வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றி ஒருபோதும் பேசப்படவில்லை எங்களின் கட்சியினர். சமஷ்டி குறித்துப் பேசவில்லை சமஷ்டி அரசமைப்பு முறை பற்றியும் அங்கு எதுவும் பேசப்படவில்லை. 'ஏகராச்சிய" என்பதை மொழிபெயர்ப்பில் எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. ஒருமித்த நாடு என்பதை சிங்களத்தில் ஒற்றையாட்சி தமிழில் ஒருமித்த நாடு அதை எப்படி அழைத்தால் என்ன? பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதை தமிழர்கள் முடிவாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்கள். எங்களவர்கள் நாடாளுமன்றில் 'ஏற்றுக் கொண்டுள்ளோம்" என்றார்கள். இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசப்படவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் கருத்து அறியப்படவில்லை.

இப்போது என்ன நடக்கிறது? சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்கிறார்கள். அதன் மற்றைய பொருள் என்னவென்றால், ஏனையவை இரண்டாம் பட்சம்தான். நான் சொன்னேன், குறைந்த பட்சம் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம். இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் என நான்கு மதத்தவர்கள் இருக்கின்றனர். குறைந்த பட்சம் வடக்கு, கிழக்காவது மதச்சார்பற்ற பிரதேசமாக இருக்க வேுண்டும் என்று. ஆனால் சம்பந்தன் அதுபற்றி பேசாது இருப்போம் என்கிறார். துரோகம் செய்கிறது கூட்டமைப்பு அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து - அதற்காக அவர்கள் வாக்களித்து - நாடாளுமன்றத்துக்கு போன நீங்கள் இன்றைக்கு, வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றி பேச மாட்டோம் என்கிறீர்கள், சமஷ்டி பற்றி பேச மாட்டோம் என்கிறீர்கள். பௌத்தத்துக்கு முதலிடம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம் என்கிறீர்கள்.

இதற்குப் பிற்பாடும் நாங்கள் உங்களுடன் இணைந்து எதை சாதிக்கப்போகிறோம்? தமிழ் மக்களுக்கு என்ன பெற்றுக் கொடுக்கப் போகிறோம். ஆகவே தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய அரசமைப்பு சாசனம் உருவாகும் சூழ்நிலையில் நீங்கள் சரியான முடிவை எடுக்காவிட்டால் நாங்கள் அதனோடு இணங்கிப் போவது என்பது எங்களின் மக்களுக்கு நாங்களும் சேர்ந்து செய்யும் மாபெரும் துரோகம். ஆகவே இந்த சூழ்நிலையில்தான் நாங்கள் அவர்களை விட்டு விலகிப் போகிறோம்.

**தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து செயற்பட முடியாது**


தவிர தேர்தல் என்று சொல்லப் போனால் அவர்களோடு சேர்ந்து போனால்தான் வெல்லலாம் என்பது சிலவேளை சரியாக இருக்கலாம் ஆனால் தேர்தலில் வெல்வது அல்ல எங்களுக்கு முக்கியமான பிரச்சினை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும். யாரும் யோசிக்கலாம் கூட்டமைப்புடன் சேர்ந்து போனால் 4 ஆசனங்கள் கூடக் கிடைக்கலாம். சிலவேளை எனக்கு அந்த ஆசனம் கிடைக்காமல் கூட போகலாம். இக்கட்டான நிலையில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கக்கூடிய நிலையில் தமிழரசுக் கட்சி மோசமான - பிழையான முடிவை எடுக்கிறது. இதற்குப் பிற்பாடும் அவர்களோடு சேர்ந்து செயற்பட முடியாது. அதற்காக கூட்டமைப்பை விட்டு வெளியேறுவது என்பதல்ல கூட்டமைப்பு உருவானதில் எனக்கும் பங்கு இருக்கிறது. தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாது. இன்னும் சொல்லப்போனால் வெளிப்படைத் தன்மை இல்லாது இரண்டு பேர் எடுக்கும் முடிவை தமிழரசுக் கட்சி வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம் - மாவை. சேனாதிராஜா ஏற்றுக் கொள்ளலாம் - அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளலாம் நானோ அல்லது எங்களுடையோ கட்சியோ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ இல்லை. ஆகவே அந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டும் - தமிழரசுக் கட்சியை விட்டு - அதாவது அவர்களுடன் செயற்பட முடியாது போனதுதான் காரணம் என்று விலகலுக்கான பின்னணி குறித்துக் கூறினார்.

அப்படியானால் தனித்தோ அல்லது புதிய கூட்டணியை ஏற்படுத்தியோ தேர்தலை சந்திப்பீர்களா என்றோம்.

பொதுச் சின்னம் ஒன்றின் கீழ் போட்டியிட நாம் தயார் ஆனால் தமிழரசுக் கட்சியுடன் அல்ல என்றவர் தொடர்ந்தார்.

**புதிய கூட்டு முன்னணியில் போட்டியிட தயார்**

சம்பந்தன் சொல்லியிருக்கிறார் 'நாங்கள் சுரேஷுடன் இணைந்து செயற்பட தயார்" என்று எனக்கும் சம்பந்தனுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாது என்பதல்ல. சம்பந்தன் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக் கொண்டு



( 05 ஆம் பக்கம் பார்க்க)

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1



## பெற்றோலால் எரிந்த சமூகவலைத்தளங்கள்

பெற்றோல் தட்டுப்பாடும் அதைத் தொடர்ந்து எங்கள் நாட்டின் அரசியல்வாதிகள் செய்யும் கூத்துக்களும்தான் சமூகவலைத்தளங்களை கடந்த வாரம் முழுவதும் கலக்கி வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு செல்லவில்லை. ஏனென்றால் பெற்றோல் இல்லை. ஆனால் அவர்களின் வாகனம் டீசலில்தானே வேலை செய்கிறது என்று கண்டுபிடித்துப் பதிவிட்டவர்களின் தகவல்களும், மகிந்த அணியினர் மாட்டு வண்டிலில் நாடாளுமன்றம் சென்ற செய்திகளும் தகவல்களும் சமூகவலைத்தளங்களை சுற்றின.

இதன் சுற்று முடிவதற்குள் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒரு கூட்டத்தினர் சைக்கிளில் நாடாளுமன்றம் செல்ல, அவர்களின் பாதுகாவலர்கள் இருபுறமும் ஓடி வரும் படங்களும் வைரலாகின.

இவை எல்லாம் ஒரு புறம் இருக்க பெற்றோல் தட்டுப்பாட்டால் சைக்கிளில் சென்றவர்களின் செல்பியும், சிலர் பெற்றோல் நிரப்பும் பெருமிதப் படங்களும் பரவின. பெற்றோல் பிரச்சினையில் நாடு எரிந்தது போல் சமூகவலைத்தளங்களும் எரிந்தன.

## 2




## தெறித்தது கூட்(வீ)டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சுரேஷ் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறிய தகவலும் சமூகவலைத்தளங்களில் தீயாய் பரவின. தீவிர தமிழரசுக் கட்சியினர் அவர்களின் வெளியேற்றத்தை வரவேற்றன. சுரேஷ், மற்றும் எதிர்க்கட்சிகளின் தீவிர ஆதரவாளர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வெளியேற்றத்தை வரவேற்றன - பாராட்டின.

சிலர் எதை ஆதரிப்பது எதை விடுவது என்று தெரியாது ஒட்டுமொத்த தமிழ் அரசியல்வாதிகளையும் திட்டித் தீர்த்தனர். பலர் நெஸ்ட்ராம்களாக மாறி ஆருடம் சொல்லினர். எது எப்படி இருந்தாலும் கூட்டு உடைவு பற்றி எழுதாத சமூகவலைத்தளவாசிகள் பற்றி இல்லை எனலாம்.

## 3



## கதிரைச் சண்டை

கடந்த வாரம் சமூகவலைத்தளத்தில் தமிழரசுக் கட்சியினரின் கதிரைச் சண்டையும் பெரும் கவனிப்பைப் பெற்றது.

முல்லைத்தீவில் தமிழரசுக் கட்சியினர் பதவிக்காக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட விடயம் பரபரப்பாக பேசப்பட்டதுடன், அது தொடர்பான படங்களும் வீடியோக்களும் சமூகவலைத்தளங்களில் வைரலாகின.

தமிழரசுக் கட்சியினரின் இந்தக் கதிரைச் சண்டை குறித்துப் எதிர்க் கருத்தாளர்கள் எள்ளிநகையாடினர். தமிழரசுக் கடசியின் தீவிர ஆதரவாளர்கள் சிலரைக்காணவே முடியவில்லை.

---

வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்...

சிரிங்க ப்ளீஸ்

மழை , மனைவி - இரண்டிற்கும் ஒற்றும்மை???

ரெண்டுமே இல்லாதப்ப எப்ப வரும்னு ஏங்குவோம். வந்தா ஏண்டா வந்துதுனு புலம்புவோம்

Like Us - www.facebook.com/siringa.pls

கணவன்: நைட் கனவுல பேய் வந்துது

மனைவி: என்னங்க உங்க பழைய காதலி வந்தாளா என்ன?




கணவன்: இல்ல... (சொல்லிவிட்டு மனைவியையே உற்றுப் பார்த்தான்)

---

வெயில் காலத்தில் மோர் பந்தல் வைக்கிற மாதிரி...




மழைக்காலத்தில் டீ பந்தல் வைத்தால் ரொம்ப நல்லாயிருக்கும் ல.

#படித்ததில் பிடித்தது





அண்ணே வாங்க பஜ்ஜி சாப்பிடலாம்.

வேணாம்டா வெளிய மழை பெய்து..

அப்போ குடை மிளகாய் பஜ்ஜி சாப்பிடுவோம்ணே நனைய மாட்டோம்ல...

---

தலைக்கு வந்தது!




தலைப்பாகையோட போனது! ஹெல்மெட் உயிர் காக்கும்.

ஸ்கூல் முடிச்சிட்டு என்னதான் காலேஜ், வேலைன்னு வந்துட்டாலும்!




பள்ளி நட்பே சிறந்ததாக உள்ளது

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நம்பிக்கையளிக்கிறது

2018 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் வடக்குக்கும் முக்கிய இடமளித்திருப்பது வரவேற்புக்கு உரியது. அரசாங்கத்தின் மீதும் – அதனுடன் பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் சற்று நம்பிக்கை கொள்ளச் செய்கிறது.

2009 இல் போர் முடிந்த கையோடு செய்திருக்க வேண்டிய விடயங்களை – முன்னெடுத்திருக்க வேண்டிய வடக்கின் அபிவிருத்தியை அரசாங்கம் இப்போதுதான் சீர்தூக்கிப் பார்த்துள்ளது. போரால் நொந்துபோன மக்களுக்கும் – தொழில் வாய்ப்பின்றி வறுமையில் உழலும் முன்னாள் போராளிகளுக்கும் இந்த பட்ஜெட் வயிற்றில் பால் வார்த்துள்ளது.

நவீன பொருளாதார மையம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்தி, சிறிய தொழில்துறை அபிவிருத்தி, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மேம்பாடு என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வடக்கின் அபிவிருத்திநோக்கிய நகர்வுக்கான நம்பிக்கைப் புள்ளி என்றே சொல்லாம். இன்று தொழில் வாய்ப்பின்றி ஏராளமான இளைஞர், யுவதிகள் வடக்கில் உள்ளனர். இந்த நிலையில் அவை குறித்த அறிவிப்பு ஏதும் இடம்பெறாமை ஏமாற்றத்தையே தருகின்றது.

தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய 'ஈ –சிற்றி' குறித்த அறிவிப்பும் இம்முறையும் இல்லை. தொழில்நுட்பத்துறையில் வேகமாக வளர்ந்து வரும் வடக்கு அடுத்த கட்டம் நோக்கி செல்ல நவீன தொழில் வாய்ப்புக்கள் அவசியம். அதிகரித்து வரும் வேலை இல்லாப் பிரச்சினையை இழிவளவாக்குவதற்கு ஈ- சிற்றிகளின் வளர்ச்சியும் பெரும் கைத்தொழில்துறை சார் நடவடிக்கைகளும் அவசியம். ஆனால் அது தொடர்பான அறிவிப்புக்களை காணமுடியாதுள்ளது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கின் ஏனைய மாவட்டங்கள் – குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் இந்த வரவு – செலவுத் திட்டத்திலும் ஒதுக்கப் பட்டுள்ளன என்பது வேதனைக்குரியதே. எனினும் கடந்த காலங்களின் வரவு – செலவுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில், தமிழர் பகுதிகளான வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு அடுத்தாண்டு பட்ஜெட்டில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை, முக்கிய மாற்றம் மட்டுமல்ல, அரசாங்கத்தின் பால் நம்பிக்கையையும் கொள்ளச் செய்கின்றது.

எனினும் அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிக் குறைப்பு சாதாரண மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது. உயர்ந்து நிற்கும் வாழ்க்கைச் செலவை குறைப்பதாக சாதாரணர்களின் பார்வையில் இந்த பட்ஜெட் இல்லை என்பதே நிதர்சனம். நாடளாவிய ரீதியில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தாத போதிலும், எளிய மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் வரவு – செலவுத் திட்டமாக இது அமையவில்லை. இருந்தபோதும் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் கன்னி பட்ஜெட் வடக்கு மக்களுக்கு மங்களகரமான ஆரம்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## கூட்டமைப்பு துரோகம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ஆணையை நடைமுறைப்படுத்த தயாராக இருந்தால் அவருடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கிறோம். ஆனால் அப்படி ஒரு நிலை இல்லாதபட்சத்தில் இணைந்து செயற்பட முடியாது. இந்த விடயத்தில் இணக்கத்துக்கு வருபவர்களுடன் இணைந்து ஒரு கூட்டு முன்னணியை ஏற்படுத்துவதில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் கொள்கையோடு இணைந்து போகாத தமிழரசுக் கட்சி போன்றவர்களுடன் சேர்ந்து போவதில்தான் பிரச்சினை. கொள்கையோடு இணைந்து போகிறவர்கள் - அது யாராகவும் இருக்கலாம் - அப்படியானவர்களுடன் இணைந்து செயற்படத் தயார். தனித்துப் போட்டி என்பது எமது இறுதி முடிவு. எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து விரைவில் முடிவு எடுப்போம்.

ஆனால் சுமந்திரன் எம்.பி., தமிழரசுக் கட்சி தாய்க்கட்சி அது எடுக்கும் முடிவுக்கு ஏனைய கட்சிகள் கட்டுப்பட வேண்டும் என்று சொல்கிறாரே என நாம் கேட்க. கேள்வியை முடிக்கும் முன்பாகவே 'தாய் சொன்னால் பிள்ளைகள் கட்சி என்ன செய்வது?" என்று கேட்டு சிரிக்கிறார்.

**அரசியலில் இருவேறு அனுபவங்கள் எமக்குண்டு**

பின் தொடர்ந்தார், தமிழரசுக் கட்சி ஓர் பழைமையான கட்சி. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் - 1979 இல் பிரகடனப் படுத்தப்பட்டது. இதேபோல் ரெலோவை எடுத்தாலும் அது பழைய கட்சி. இதிலும் விட பழைய கட்சியாக காங்கிரஸைப் பார்க்கலாம். அடுத்து பழைமையான கட்சியாக தமிழரசுக் கட்சியைப் பார்க்கலாம். இதை இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் 40 வருட வரலாறு என்பது சாதாரணமானது இல்லை. எல்லோருக்கும் பல அனுபவங்கள் உள்ளன. இன்னும் பார்க்கப்போனால் தமிழரசுக் கட்சியில் உள்ளவர்களை விட எங்களுக்கு வித்தியாசமான அனுபவம் உள்ளது. நாங்கள் ஓர் ஆயுத விடுதலைப் போராட்டம் ஊடாக வந்தவர்கள். ஆகவே அதில் வந்திருக்கக்கூடிய சரிகள், பிழைகள், நன்மைகள், தீமைகள், தவறுகள் - இதேபோல பிற்பாடு நாடளுமன்ற ஜனநாயக வழியிலும் வந்தவர்கள். அதில் சிங்கள மக்கள் - சிங்கள அரசியல் தலைவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் - எப்படி நடக்கிறார்கள் என்பது தொடர்பான அனுபவமும் - அதில் 18 வருட அனுபவமும் உண்டு. ஆகவே 40 வருட வரலாறும் அனுபவமும் எமக்கு உண்டு.

**பேசும் யோக்கியதை சுமந்திரனுக்கு இல்லை**

தமிழரசுக் கட்சி தாய்க் கட்சி என்பதில் என்று சொல்வதில் ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தின்போது 4 கட்சிகள்-தான் இருந்தன. ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, காங்கிரஸ். கூட்டமைப்பு உருவாக்கத்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சம்பந்தனும், காங்கிரஸ் சார்பில் குமரகுருபரனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் நானும், ரெலோ சார்பில் ஸ்ரீகாந்தாவுமே கையொப்பமிட்டோம். இன்று கூட்டணி அதில் இல்லை, காங்கிரஸ் இல்லை. ஆகவே தமிழரசுக் கட்சி இடையில் செருகப்பட்ட கட்சியே தவிர, ஆரம்பத்தில் இருந்த கட்சியல்ல. ஆகவே கூட்டமைப்புப் பற்றிப் பேச யாருக்கு உரித்து இருக்கிறது என்றால் எங்கள் மாதிரியானவர்களுக்குத்தான். அது சுமந்திரனுக்கோ - சுமந்திரன் அரசியலுக்கு வந்து ஐந்து வருடம்தான். - வேறு யாருக்கோ இதைப் பற்றிப் பேச யோக்கியதை கிடையாது - அதற்கான உரித்தும் பிடையாது. அவர்கள் தாய்க்கட்சி என்று சொல்லிவிட்டுப் போகட்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை.ஆரம்பத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்கள் ஈ.பி.ஆர். எல். எவ் போன்ற கட்சிகளே. நிச்சயமாக தமிழரசுக் கட்சியல்ல. தமிழரசுக் கட்சி என்பது பின்னால் இருக்கக்கூடிய கட்சி. இன்னொரு விதத்தில் சொல்வதனால் அது ஒரு எல்டர்ஸ் பார்ட்டி(முதியவர்களின் கட்சி). தாய்க்கட்சியோ, சேய்க்கட்சியோ எந்தக் கட்சியாக இருந்தாலும் தான் வரித்துக் கொண்ட கொள்கையில் இருந்து விலகிவிட்ட பின்பு எந்தக் கட்சியாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவை இல்லை என்றவரிடம் அப்படியானால், தமிழரசுக் கட்சிக்கு அதிக ஆசனப் பங்கீட்டுக் கும் அது எடுக்கும் முடிவுகளுக்கும் கூட்டமைப் பில் இருந்த சமயத்தில் சம்மதித்தீர்கள்தானே. கட்சியை பதிவு செய்ய வேண்டும் என்று ஆரம்பத்தில் நீங்களும் வலியுறுத்தவில்லை. தமிழரசுக் கட்சியின் கருத்துக்கு சம்மதித்தீர்கள்-தானே எனக் கேட்க.

அடிப்படையில் இந்தக் கேள்வி தவறு என்று மறுத்தார். கட்சியைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஆரம்பத்திலேயே பேசப்பட்டது. விடுதலைப் புலிகளிடமும், பிரபாகரனிடமும் இதுபற்றிப் பேசப்பட்டது. சுரேஷ் இதனை (கட்சியை) பதிய வேண்டும் என்று வற்புறுத்து கிறார் அவரிடம் கூறப்பட்டது. அப்போது -2002 இல் இப்போது போன்ற பாரதூரமான பிரச்சினை இருக்கவில்லை. இப்போது இருப்பது போன்றே இருக்கட்டும் எனக் கூறிவிட்டார். அவரைப் பொறுத்தவரை அவர், ஆயுதப் போராட்டத்தை வழி நடத்தக்கூடியவர். அவருக்கு இது ஒரு சில்லறைப் பிரச்சினையாக தெரிந்திருக்கலாம்.

**குண்டு சட்டிக்குள் குதிரை ஓடுகிறார்கள்**

விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னான நிலைதான் - பலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க காங்கிரஸ் இவர்கள் எல்லாம் விடுதலைக்குப் போராடியவைகள். இவைகளில் பல சபைகள் இருக்கின்றன. மத்தியகுழு, செயற்குழு, வெளிநாட்டு விவகாரங்களை கையாளும் குழு, அகதிகள் விடயத்தைக் கையாளும் குழு எனப் பல குழுக்கள் இருக்கின்றன. எங்களிடம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் என்ன இருக்கிறது. ஒன்றுமில்லை. ஆகவே நாங்கள் சொன்னோம் ஒரு வடிவத்தை ஏற்படுத்த வேண்டும் என்று, இனப்பிரச்சினை என்பது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல் யாழ்ப்பாணத்தில் - இலங்கையில் தீரக்கக்கூடிய பிரச்சினையில்லை. நாங்கள் வெளிநாடுகளோடு பேச வேண்டும். எங்களின் கருத்துக்களை கொண்டு செல்ல வேண்டும். அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும். அதற்கான குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். இது சம்பந்தமாக சரியான விவாதங்கள் நடத்தப்பட வேண்டும். நிபுணர்களின் அறிக்கைகளைப் பெற வேண்டும். ஆகவே அதைச் செய்வதற்கு தமிழரசுக் கட்சி தயாராகவில்லை. மற்ற எல்லோரு தயாராகவுள்ளனர். அப்படி நடந்தால் பிடிமானம் தங்களை விட்டுப் போய் விடும் - அதை இழக்கக்கூடாது என்ற பயத்தால் தமிழரசுக் கட்சி பதிவை மறுக்கிறது.

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல் இல்லை. அதில் யார் வென்றாலும் தமிழர்கள்-தான் ஆட்சி செய்யப்போகிறார்கள். இந்தத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வென்றால் என்ன? புளொட், ரெலோ அல்லது ஈ.பி.டி.பி. வேறு கட்சிகள் வென்றால் என்ன வரப்போவது தமிழர்கள்தான். ஆகவே இதில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்துதான் போட்டியிட வேண்டும் என்பதில்லை.

விடுதலைப் புலிகள் இருந்த வரை வேட்பாளர்களை அவர்களே தீர்மானித்தார்கள். அப்போது அவர்களை கட்டாயப்படுத்தும் நிலை எமக்கு இல்லை. பின்னர், ஆசனப் பங்கீடுகளின் போது தமிழரசுக் கட்சியினருக்கு பெரும்பான்மை இடத்தை கொடுத்தோம். கூட்டை உடைத்துவிட நாம் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான். தவிர தேர்தல் நேரத்தில் இவர்கள் சீற்றுக்காக ஒற்றுமையை உடைக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது என்பதற்காக அவர்களை அங்கீகரித்தோம். இன்று நாம் ஐக்கியத்தை குழப்புகிறோம் என்று சொல்லவில்லை. தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிராக பாரதூரமான - பின்னடைவுக்கு இட்டுச் செல்லும் வழிகளை கையாள்கிறது. தமிழரசுக் கட்சி சரியான ஒழுங்குக்கு வரவேண்டும். இல்லை என்று சொன்னால் தனிமைப்படும் நிலை உருவாகும்

# ரோஹன விஜயவீர: பார்க்கப்படாத பக்கங்கள்



– சந்திரசேகர ஆசாத் –

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு அரசாங்கத்தையே அதிர வைத்த ஓர் ஆயுதப் புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திய பெருமைக்குரியவர் ரோஹண விஜயவீர. இது இலங்கையின் வரலாற்றில் ஆழமாகப் பொறிக்கப்பட்ட விடயமாகும். 1953 ஆம் ஆண்டு இடதுசாரிகளின் தலைமையில் இடம்பெற்ற நாடு பரந்த ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டங்களும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை நிலைகுலைய வைத்தபோதும், அது ஆயுதப் போராட்ட வடிவத்தை எடுக்காத காரணத்தால். கண்டவுடன் சுடும் அதிகாரம் கொண்ட இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு அதன் மூலம் அது நசுக்கப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நா. சண்முகதாசன் தலைமையில் 1965 இல் முன்னெடுக்கப்பட்ட ஆலயப் பிரவேச, கடைப் பிரவேச போராட்டங்களின்போது வன்முறைகளை எதிர்கொண்ட நிலையில் அது ஆயுதப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றது. ஆரம்பத்தில் பரந்துபட்ட மக்கள் இயக்கமாக உருவானாலும் காலப் போக்கில் அது சாதிச் சண்டை என்றளவுக்கு தன் புரட்சிகரத் தன்மையை இழந்தது. ஆனால் ரோஹண விஜவீர தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி இத்தகைய பிறழ்ச்சிகள் எதற்குள்ளும் அகப்படாமல் ஒரு உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவுவது என்ற கொள்கையின் அடிப்படையில், ஓர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் வகையில் படிப்படியாக வளர்ச்சிபெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளரான விஜயவீர, சோவியத் யூனியனிலுள்ள லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புக்காக அனுப்பப்பட்டார். அங்கு சோவியத் சீன தத்துவார்ந்த முரண்பாடு எழுந்தபோது இவர் சீனச் சார்பு நிலைப்பாட்டை எடுத்த காரணத்தால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். சிறிது காலம் ஜேர்மனியில் தங்கிவிட்டு மீண்டும் இலங்கைக்கு வந்து சண்முகதாசனின் தலைமையிலான சீனச் சார்புக் கட்சியில் இணைந்து கொண்டார். இரவுபகல் பாராத இவரின் உழைப்பு எங்கும் நின்றது. இளைஞர்களை அணி திரட்டுவதில் காட்டிய தீவிரமும், உலகப் புரட்சித் தலைவன் சே குவேராவை முன்னிலைப்படுத்தி, இவர் மேற்கொண்ட பரப்புரையும் கட்சி உயர்மட்டத்துக்கு உயர்த்தியது. அதன் காரணமாக அவர் அகில இலங்கையிலும் வாலிபர் சங்கத் தலைவராகவும், கட்சியின் அநுராதபுர மாவட்ட அமைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இப்படியான நிலையில் கட்சியின் தேசிய மாநாட்டில் சண்முகதாசன் ஒரு தமிழர் என்பதால் தமிழரின் தலைமையைச் சிங்கள மக்கள் ஏற்க மாட்டார்கள். எனவே, கட்சித் தலைமை சிங்களவர்களுக்கே வழங்கப்பட வேண்டுமென ஒரு பிரேரணையை கொண்டு வந்தார். சிங்கள தமிழ், முஸ்லிம் தோழர்கள் அனைவருமே இப்பிரேரணையை நிராகரித்த காரணத்தால் அது படுதோல்வியடைந்தது. ஏற்கனவே கட்சிக்குள் இன்னொரு கட்சியை வளர்க்கும் அடிப்படையில் தன்னைச் சுற்றிப் பெருந்திரளான சிங்கள வாலிபர்களைத் திரட்டியிருந்த அவர், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் அனைவரும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த கனவான்கள் எனவும், அவர்களால் புரட்சியைப் பற்றிப் பேச முடியுமே ஒழிய புரட்சிக்குத் தலைமை தாங்க முடியாதென்ற பரப்புரையை பெருமெடுப்பில் முடுக்கிவிட்டார்.

அதன் காரணமாக, கட்சியின் மத்திய குழு அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது. அதைப் பொருட்படுத்தாத விஜயவீர, 'சே குவேரா குழுவினர்' என்று தன்னைச் சுற்றி அமைக்கப்பட்ட குழுவை 'மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பாக உருவாக்கிக் கொண்டார். தீவிரமான இளைஞர்களைக் கொண்ட அணி என்பதால் பல்கலைக்கழகங்கள், தொழில் நிலையங்கள் எனப் பல்வேறு முனைகளிலும் இயக்கம் வளர்ந்தது. ஆயுதப்படைகள், காவல்துறையினர் மத்தியிலும்கூடத் தீவிர ஆதரவாளர்கள் உருவாக்கப்பட்டனர். மொனராகல, வெள்ளவாய போன்ற காட்டுப் பகுதிகளில் இளைஞர், யுவதிகளுக்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வெளிப் படையான ஆதரவு வழங்கினர். இதன் மூலம் அக்கட்சியினர் பலரின் ஆதரவையும் திரட்டிக் கொண்டனர். 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி புரட்சியை ஆரம்பிக்கப் படுவதாக இருந்ததாகக் கூறப்பட்டபோதிலும், இரு வாரங்களின் முன்பே விஜயவீர உட்படப் பல முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும் ஏப்ரல் 4ஆம் நாள் கொழும்பு றீகல் தியேட்டர் குண்டு வெடிப்புடன் போராட்டம் ஆரம்பமானது. ஏற்கனவே கொழும்பில் அரச படைகள் தயார் நிலையில் இருந்ததால், பலர் பல இடங்களிலும் கைது செய்யப்பட்டதை விட, கொழும்பில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஆனால், கேகாலை, குருநாகல், அநுராதபுரம் போன்ற பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் தாக்கப் பட்டன. கேகாலை, திசமாறகம, வெள்ளவாய, குருநாகல், அநுராதபுரத்தின் சில பகுதிகள் ஜே.வி.பியினரின் கட்டுப்பாட்டில் இரண்டு மாதங்களுக்கு மேல் இருந்தன. பின்பு அவை அரச படைகளால் கைப்பற்றப்பட்டன. யாழ்ப்பாணச் சிறையில் அடைக்கப்பட்ட ரோஹண விஜயவீரவை மீட்கும் முயற்சியும் தோல்வியில் முடிந்தது. 1977 இல் ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு விஜயவீர உட்பட அனைத்து ஜே.வி.பியினரும் பொது மன்னிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டனர். 1984 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் விஜயவீர போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். 1980,1989 காலப் பகுதியில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்பட்டது. அது படையினரின் குடும்பங்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆகியோரை இலக்கு வைத்துக் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதன்போது 70 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் படையினரால் கொல்லப்பட்டனர். தலைமறைவாக இருந்த ரோஹண விஜயவீரவும் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வரலாற்றைப்படிக்கும்போது விஜயவீர ஒரு உண்மையான புரட்சிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதி போலவே தோன்றும். ஆனால், அவரின் பார்க்கப்படாத சில பக்கங்களைப் பார்ப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.

'அதிதீவிர இடதுசாரி வாதம் அதிதீவிர வலதுசாரி வாதத்திலேயே போய்முடியும்." என்ற மாமேதை லெனினின் வார்த்தைகள் இவருக்கும் பொருந்தும். இலங்கையில் ஒரு தமிழன் புரட்சிக்குத் தலைமை தாங்குவதை, சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது ஓர் அப்பட்டமான வலதுசாரி இனவாதச் சிந்தனையாகும். பட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இன, மதவாத அடிப்படை கிடையாது. கியூபப் புரட்சியை முன்னின்று நடத்திய சே குவேரா ஒரு ஆர்ஜென்ரீனர். லெனினின் பின்பு சோவியத் ஒன்றியத்தின் தலைவராக விளங்கிய 'ஸ்டாலின்' சிறுபான்மை இனத்தவரான ஜோர்ஜியர், வலதுசாரி சக்திகளே எப்போதும் அதிகாரத்தை பிடிக்க இன, மத பேதங்களைக் கையில் எடுப்பதுண்டு.

( 18 ஆம் பக்கம் பார்க்க )

# புதுவிதி நடத்தும் பரிசு மழை போட்டி - 01 -



## முதல் சுற்றின் மூன்றாம் பரிசுக்கான வினாக்கள் - 11.11.2017

**01.** பாண் என்பதன் தூய தமிழ் பதம் யாது?

**02.** உலகில் முதலில் பத்திரிகை வெளியிட்ட நாடு எது?

**03.** காந்தள் மலரின் விஞ்ஞானபூர்வ பெயர் யாது?

**04.** அமெரிக்காவின் பூர்வகுடி மக்கள் யார்?

---

01. ..................................................

..................................................

02. ..................................................

..................................................

03. ..................................................

..................................................

04. ..................................................

..................................................

### போட்டிக் கூப்பன்

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

தே. அ. அ. இல : ..................................................

பாடசாலை : ..................................................
(மாணவராயின்)

தொலைபேசி இல : ..................................................

---

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 18.11.2017**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி**



**புதுவிதி**
**கரடிப்போக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

**உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்**

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 11)



# கல்வியங்காடு (புலிகளின் கோட்டை)

- வல்வை ரவி -

தமிழர் வரலாற்றில், வரலாற்றுக் கறை படிந்த மற்றும் இலக்கியங்களில் புகைபடிந்த நிலையிலுமுள்ள வீரம் செறிந்த தடங்களைப் புடம் போட்டுக் காட்டுபவையாக இடப்பெயர்கள் அமைகின்றன. ஓர் இனத்தின் விடுதலை ஓர்மத்தை மழுங்கடிக்க வேண்டுமாயினும் சரி அவ்வினத்தின் வரலாற்றுப் பின்புலங்களை முழுமையாக அழிக்க வேண்டு மாயினும் சரி, அவ் இனத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்தவேண்டும். அதேகணம் அவ்வினத்தவர் வாழ்ந்த தேசப் பெயர்களை மாற்றவேண்டும். இன்றைய கால கட்டத்தைப் பொறுத்தமட்டில் நாளுக்கு நாள் அபிவிருத்தி என்ற பெயரில் ஊர்பெயர்களும் உருக்குலைப்புச் செய்யப்பட்டு வருவதைக் காணலாம். எனவே நாம் நம்மினத்தின் இருப்பை நிலைநாட்ட நம்மூர் மண்வாசனையை புரிந்து வைத்திருப்பதே மிகவும் பொருத்தமானது.

யாழ். குடாநாட்டில் நல்லூர் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள ஊரே கல்வியங்காடு அல்லது கல்வியன்காடு அல்லது கள்ளியங்காடு ஆகும். கிழக்கு எல்லையாக கட்டைப்பிராயும், வடக்கு எல்லையாக இருபாலையும், கோப்பாயும், தென்மேற்கு எல்லையாக நல்லூரும், மேற்கு எல்லையாகத் திருநெல்வேலியையும் கொண்டமைந்த வகையில் காணப்படுகின்றது கல்வியங்காடு. ஏறக்குறைய 700 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்த யாழ்ப்பாண இராச்சியத் தின் தலைநகரமான நல்லூர் நகரின் பெரும்பகுதியாக இந்த ஊர் இருந்தது. சங்கிலிய மன்னன் ஆட்சிக் காலத்தில் அனைத்து சிறுநகரங்களும் இராசதானியாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டே வந்தது. அதன்கீழ் கல்வியங்காடு நல்லூர் இராசதானியின் முதன்மை நகரமாக விளங்கியது. சங்கிலியன் நகர்வலம் செல்லும் இராசபாதைவீதி கல்வியங்காட்டை ஊடறுத்தே செல்கின்றது.

சங்கிலிய மன்னனால் நிறுவப் பட்ட சட்டநாதர் சிவன்கோயில் கல்வியங்காட்டின் எல்லையில் அமைந்திருப்பதும் கல்வியங்காட்டின் சிறப்பினையே மென்மேலும் எடுத்துக் காட்டுக்கின்றது. யாழ்ப்பாணம் பரராஜசேகர மகாராஜவின் ஆட்சியின் கீழ் இருந்தபோது கல்வியங்காடு அம்மன்னனின் அவைப் பிரதிநிதியான சூரியமூர்த்தி தம்பிரானின் ஆட்சிப் பொறுப்பின் கீழ் அமைந்தது எனக் கலிவியங்காட் டுச் செப்பேடு கூறுகின்றது. பரராஜசேகரன் மிகுந்த விநாயகர் பக்தன் ஆதலால் தன் ஆட்சிக்காலத் தில் பல பிள்ளையார் கோவில்களைக் கட்டுவித்தான். குறிப்பாக ஸ்ரீசூரியமூர்த்தி தம்பிரானால் கல்வியங்காட்டின் புராதன சின்னமாக பழம்பெரும் கோவிலாக ஸ்ரீநடராஜ முக்குறுனிப் பிள்ளையார் கோவில் அமைக்கப்பட்டது. இக் கே-ாவிலில் மகாராஜவ-ின் கட்டளைகளும், கலிவியங்காட்டுச் செப்பேடும் பாதுகாக்கப்பட்டு வந்தன.

இதேவேளை ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம், கலட்டி பிள்ளையார் ஆலயம், இலங்கை நாயகி அம்மன் ஆலயம் மற்றும் முக்குறுணிப் பிள்ளையார் ஆலயங்கள் போன்றவை இங்குள்ள குறிப்பிடத்தக்க இந்து ஆலயங்களாகும்.

கல்வியங்காட்டின் சிறப்பை, பழைமையை எடுத்துக்காட்ட கல்வியங்காட்டுச் செப்பேடு உள்ளது. இதில் முழுமை யான வரலாற்றை அறிய முடியாது போனாலும் பழைமையான தொல் பொருள் மூலமிது வென்பது முக்கியமான விடயமாகும்.


இச் செப்பேட்டின் முக்கியமான சில வரிகள்

'ஸ்வஸ்தீ ஸ்ரீமத் மஹாமண்டலேசுரன்",
'மஹாராயர் பிருதுவிராஜ்யம் பண்ணியகுளாநின்ற சாலிவா",
'கனசகாப்தம் தொளாயிரத்து நாற்பதுநாலின் மேல் செல்வா",
'நின்ற சுபகிருது வருஷம் தைமாதம் குருவாரமும் சுவாதி நட்சத்திரமும் பறுவமும் கூடின சுபதினத்தில் யாழப்பாணம் இராச்சியம்", 'பண்ணியிருந்த பரராசசேகர மகாராஜா அவர்கள் சிதம்பரத்துக்கு வந்து சிதம்பரேசுர தரிசனம் பண்ணி, சபாப திக்குக் குண்டலமும் பதக்கமும் சாத்தி தில்லை மூவாயிரவருக்கும் குண்டலம் போட்டுச் சுவாமிக்கு என்றும் கட்டளை நடக்கும்படி"என அமைகின்றது.



தமிழின விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு, திட்டமிடல் போன்ற பல தரப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட முக்கியமான மையமாக இக்கல்வியங் காடு விளங்கியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தொடங்கிய தலைவர் பிரபாகரனுக்கு ஆரம்பம் முதல் உறுதுணையாக இருந்த செல்லக்கிளி அம்மான் கல்வியங்காட்டை சேர்ந்தவர். இவரின் பங்களிப்பிலேயே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு முதன்முதலாக ஒரு துப்பாக்கி வாங்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கல்வியங்காடு, அயலூரான நாயன்மார்கட்டை சேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் ஒரு காலத்தில் புலிகளின் கோட்டைகளில் ஒன்றாக கல்வியங்காடு விளங்கியது.

இங்குள்ள பொதுநூலகம் ஞானபாஸ்கரோதய சங்கமாகும். இதனூடாக இப்பகுதி மக்களது கல்வி வளப்படுத்தப்படுவதனையும் அவதானிக்கலாம். இனம், மொழி, கல்வி, சமயம், கலை எனப் பல்துறைகளிலும் போற்றத்தக்க பகுதியாக கல்வியங்காடு மண்வாசனை வீசிவருவது யாவரும் அறிந்ததே.



# வாரப்பலன்

## மேடம்

வலிமை கூடும். அளவுக்கதிகமாக ஆடம்பர செலவுகள் ஏற்படும். இழுபறியில் இருந்த காரியங்கள் வெற்றியாகும். நண்பர்கள் உதவியாக இருப்பார்கள்.

## துலாம்

விஷயங்கள் சாதகமாக அமையும். உங்கள் காரமான வார்த்தைகள் அடுத்தவர்கள் மனதினைப் புண்படுத்தலாம். காரியங்களைக் தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். தேவையற்ற பிரச்னைகள் குடும்பத்தில் தோன்றும், வாகனங்களால் செலவுகள் அதிகரிக்கும்.

## ரிஷபம்

சோதனையை சந்திப்பீர்கள். நினைத்த காரியத்தை செய்ய இயலாது போகும். எடுத்த காரியங்கள் இழுபறி தரும். குடும்பத்தாரை சந்தோஷமாக வைத்துக்கொள்வீர்கள். நண்பர்களால் தொல்லைகள் உண்டாகும்.

## விருச்சிகம்

நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். அலைச்சல் அதிகமாகும். உறவினர்களின் வருகை குடும்பத்தில் மகிழ்ச்சி தரும். ரத்த இழுத்தம் உள்ளவர்கள் உடல் நிலையில் கவனம் வேண்டும். சரிசம பலன் உள்ள வாரம்.

## மிதுனம்

எடுத்த காரியம் இழுபறி தரும். தேவையான வரவு வரும். பேச்சில் எச்சரிக்கை தேவை. உடன்பிறந்தோரால் சில சங்கடங்கள் நேரிடும். வாழ்க்கைத்துணையின் செயல்கள் மந்தமாக இருப்பதாக உணர்வீர்கள்.

## தனுசு

கடமையைச் சரிவர செய்தால் நல்ல பலன் கிடைக்கும். உரிய நேரத்திற்கு வரவு வந்து சேரும். உறவினர்களால் குழப்பங்கள் தோன்றும். பிள்ளைகளால் கூடுதல் செலவுகளை சந்திக்க வேண்டி இருக்கும்.

## கடகம்

எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உடன்பிறந்தோர் உதவி செய்வார்கள். வீடு வாங்க முயற்சிப்போருக்கு சாதகமான சூழல். வீட்டில் ஆடம்பர பொருட்கள் சேரும். ஆன்மிகப் பணிகளுக்காக அதிகம் செலவழிப்பீர்கள்.

## மகரம்

நன்மை தரும் வகைகளில் தியாகம் செய்ய தயாராக இருப்பீர்கள். உடன்பிறந்தோருக்கு உதவி செய்வீர்கள். பிள்ளைகளின் நல்வாழ்விற்காக திட்டமிடுவீர்கள். தியானம், யோகா போன்றவற்றில் ஈடுபாடு கூடும்.

## சிம்மம்

செயலில் வேகம் இருக்கும். வரவு நன்றாக இருக்கும். செயல்திட்டங்கள் நன்மதிப்பு பெறும். புதிய வீடு கட்டும் முயற்சி கைகூடும். கனவுகளும் கற்பனைகளும் நனவாகும். கலைத்துறையினருக்கு வெற்றி கிட்டும்.

## கும்பம்

தாயார் வழி சொத்துகள் சேரும். புதிய வாகனம் வாங்கச் சாதகமான நேரம். உடல்நிலையில் சிறப்பு கவனம் செலுத்துவது நல்லது. எப்போதும் சிக்கனத்தைக் கடைபிடித்து வரும் நீங்கள் திடீரென்று திடீரென ஏற்படும் செலவினால் வருந்துவீர்கள்.

## கன்னி

தைரியம் கூடும். சுறுசுறுப்பு கூடும். வரவிற்குப் பஞ்சமிருக்காது. தேவை என நீங்கள் நினைக்கின்ற பொருட்கள் உங்களை வந்தடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்களது புத்தி கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவர்.

## மீனம்

வரவிற்கு பஞ்சம் இருக்காது. உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணைவர் உங்களது சிரமங்களில் பங்கெடுத்துக் கொள்வார்.



அம்பாறை இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் காணி சிவீகரிப்புக்கெதிராக நடைபெற்ற விவசாயிகள் போராட்டம்.



இலங்கைக்கான சீன நாட்டுத் தூதுவாராலயமும் கிழக்கு மாகணக் கல்வி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத:தடன் இணைந்து நடத்திய டியன்ஜன் சிம்பனி இசை நிகழ்வு.



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேராவிலில் உள்ள மாவீரர் முயிலும் இல்லத்தை துப்பரவாக்கச் சென்ற இளைஞர்களுக்குமிடையில் முறுகல நிலை ஏற்பட்டுள்ளது.



மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலகமும் மண்முனை மேற்கு கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய வருடாந்தர கலைஞர்கள் கலாசார விழா **07.11.2017** அன்று நடைபெற்றது.



கொழும்பு புத்தளம் பிரதான வீதியில் மதுரங்குளியில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் 7 பேர் பலியானார்கள். 45 பேர் காயப்பட்டுள்ளனர்.



கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள் குடியேற்றக் கிராமமான ஊத்துச்சேனைப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் வகையிலான உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் தையல் பயிற்சி முடித்த யுவதிகளுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# குட்டீஸ்...!

தொகுப்பு: - ஏஜெசி -

puthuvithi@gmail.com



## இளவரசியும் பதினொரு அன்னங்களும்

அங்கம் 2

எலிஸாவைக் குளிப்பாட்டத் தயார்படுத்தத் தொடங்கினாள் ராணி. ஏற்கனவே முதல் நாளிரவு என்ன செய்யவேண்டுமெனத் திட்டம் தீட்டியிருந்தாள் அந்த மாயக்கார ராணி. நேரத்தோடு படுக்கையிலிருந்து எழுந்தவள், தன் மந்திரசக்தியால் மூன்று தவளைகளை வரவழைத்தாள். கருநிறத்திலிருந்தஅந்தத் தவளைகள் பார்க்கச் சகிக்க முடியாத அளவு குரூரதோற்றம் கொண்டவையாக இருந்தன. ஒரு தவளையைப் பார்த்து 'நீஅவளின் தலையில் ஏறி உடகார்ந்து கொள். உன்னைப் போலஅவளும் படுமுட்டாளாகட்டும்" என்று கூறினாள். பின், அடுத்த தவளையிடம் 'நீ அவளின் நெற்றியில் ஏறி உட்கார்ந்து கொள். உன்னைப் போல பார்க்கச் சகிக்க முடியாத முகம் அவளுக்கும் வரட்டும்" என்றாள் ராணி. மூன்றாவது தவளையின் கிட்டப்போய் 'நீஅவள் இதயமருகே உட்கார்ந்துகொள். தீய எண்ணங்களின் பிறப்பிடமாக இவள் மாறி, அதன் அவஸ்தைகளை அனுபவிக்கட்டும்" என்று கிகிசுத்தாள் அந்தக் கொடியவள்.

மன்னன் எந்தக் காரணம் கொண்டும், அவளை அரண்மனைக்குள் நிறுத்தி விடக்கூடாது என்பதிலேயே அவள் குறியாக இருந்தாள். மன்னன் தன் அழகில் மயங்கிக் கிடக்கும், இந்தச் சமயத்தில், தான் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்றுஅவள் நம்பினாள். ஒரேயடியாக மன்னனின் பிள்ளைகளை விரட்டிவிட்டால், இராச்சியத்தைக் கைப்பற்றுவது சுலபமாகி விடுமென அவள் திட்டமிட்டிருந்தாள். குளிக்கும் நேரம் வந்தது. அன்புள்ள ஒருதாய் போல சிரித்த முகத்தோடு எலிசாவை அவள் அறையிலிருந்து அழைத்து வந்தாள் ராணி. இன்று உன் அப்பாவிடம் போகப் போகிறாய். அழகாகப் போக வேண்டாமா. நன்றாக நீராடி, புத்தாடை உடுத்தி, உன்னை மன்னனிடம் அழைத்துச் செல்கிறேன் என்று இனிக்க இனிக்கப் பேசினாள் ராணி. ராணியின் தீயநோக்கம் எதையும் அறியாத எலிசா மகிழ்ச்சியடைந்தாள். இனியாவது நான் தனியாக வாழாமல், அப்பாவோடு வாழலாம் என்று நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். எலிசா நீர்த் தொட்டிக்குள் இறங்கினாள். தலையைத் தொட்டித் தண்ணீருக்குள் முழுமையாக அமிழ்த்தினாள். தண்ணீருக்குள் தயாராக இருந்த மூன்று தவளைகளும், ராணி கூறியபடி எலிசாவின் உடம்பில் ஏறி உடகார்ந்தன. அவள் தண்ணீரில் இருந்து தலையை வெளியே எடுத்தபோது, தவளைகள் இருந்த இடங்களில், மூன்றுரோஜா வர்ண பொப்பி மலர்கள் தலைநீட்டின. நற்குணமும், சூதுவாதும் இல்லாத எலிசாவிடம், ராணியின் மாயாஜாலங்கள் பலிக்கவில்லை. கெட்டவளான ராணிக்கோ இதனால் கோபம் பல மடங்காயிற்று. எலிசாவின் அழகான தலைமுடியை அலங்கோலமாக்கி, அருவருப்பான நாற்றம் வீசும் தைலத்தைப் பூசி ராணி, அவள் முகத்தை கேவலப்படுத்திவிட்டு, மன்னனிடம் அழைத்துச் சென்றாள்.

மன்னன் தன் மகளைநேரில் கண்டகோலம் அவனை அதிர்ச்சியடையவைத்தது. இவள் என் மகளில்லை . அப்பால் கொண்டு செல்லுங்கள் என்று சத்தமிட்டான். பாவம் காவலர்கள் என்ன செய்வார்கள்? அது மன்னனின் மகள்தான் என்று அறிந்திருந்தும், மன்னனுக்கும் ராணிக்கும் பயந்து, எலிசாவை ஒரு குதிரையில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். அவர்களால் அவ்வளவுதான் செய்ய முடிந்தது. அழுது கொண்டே சென்ற எலிசாவின் காதில் ராணியின் வெற்றிக் கொக்கரிப்பு, நீண்டநேரம் கேட்டுக்கொண்டே இருந்தது. குதிரை தன் கால்போனபோக்கில் எலிசாவை அழைத்துச் சென்றது. பூத்துக் குலுங்கும் ஒரு பிரதேசத்தை அடைந்தபோது, சூரியனும் மெல்லமெல்ல மேற்கே மறைய ஆரம்பித்திருந்தான். குதிரையிலிருந்து குதித்த எலிசா கொஞ்சத் தூரம் நடந்து சென்றபோது, அதிக உயரமில்லாத, பரந்து விரிந்து கிளை பரப்பிய மரமொன்றைக் கண்டாள். அந்தப் பரந்து விரிந்த கிளை அவள் படுக்கையானது. மெல்ல ஏறி அவள் கிளைகளில் சாய,மெல்லியதென்றல் வருட, மின்மினிப் பூச்சிகள் சுற்றி நின்று தாலாட்ட அவள் உறங்கிப் போனாள்...

பறவைகளின் கீச்சொலியுடன் பொழுதுவிடிந்தது. கண் விழித்த எலிசா தன் முன்னே கண்ட இயற்கை அழகில் மதிமயங்கினாள். சற்றுதள்ளி ஒரு சிற்றருவி இருந்தது. மரத்திலிருந்து குதித்த எலிசா அந்த அருவியை நோக்கி நடந்தாள். அருவிக் கரையோரம் நின்று தெளிந்த நீரில் விழுந்த தன் பிம்பத்தைப் பார்த்துப் பயந்தாள். அந்த அளவுக்கு அவள் முகம் கெட்ட எண்ணம் கொண்ட ராணியால் சிதைக்கப்பட்டிருந்தது. மெல்லத் தண்ணீருக்குள் இறங்கினாள். புத்துணர்ச்சி தந்த ஆற்று நீரில் நீந்தினாள். நீந்திக் கரையேறியவள் ஆற்றுப் பக்கமாகக் குனிந்து தன் முகத்தைதெளிந்த நீரப் பகுதியில் நோக்கினாள். அந்த மாயஆற்றுத் தண்ணீர்அவளைஅற்புதஅழகியாக மாற்றி இருந்தது. கூந்தல் நீண்டு கருகருவென்று இருந்தது. அவள் கண்களைஅவளால் நம்பமுடியவில்லை. மகிழ்ச்சி மிகுதியால், அங்கும் இங்கும் ஓடினாள் பூக்களைக் கொஞ்சினாள். தன்னிடம் ஓடி வந்த முயல்களைக் கொஞ்சினாள். தன்னை இப்பொழுது அப்பா நேரில் பார்க்கமாட்டாரா என்ற ஏக்கம் வந்தது. என் சகோதரர்களாவது என்னை இப்பொழுது வந்து பார்க்க மாட்டார்களா என்ற ஏக்கமும் வந்தது. நான் தனியாக இங்கே நின்று என்ன செய்ய முடியும் என்று அவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

( எலிஸா மீண்டும் வருவாள்...)

## நீங்களும் குட்டி எழுத்தாளர் ஆகலாம்.

என் வீடு பாடசாலையிலிருந்து அதிக தூரம் இல்லை. எனவே நடந்தே நான் பாடசாலை செல்வது வழக்கம். ஐந்து நிமிட நடை போதும். சில நாட்களில் நேரம் பிந்தி விடும் என்று தோன்றினால் மிதி வண்டியில் செல்வேன். இப்படித் தான் ஒருநாள், நான் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். வழமைபோல பாடசாலை செல்வோர், வேலைக்குச் செல்வோர், பாடசாலையைத் தாண்டியுள்ள சந்தைக்குச் செல்வோர் என்று சாலை நடமாட்டம் அதிகமாக இருந்தது. திடீரென சொல்லாமல் கொள்ளாமல் வீட்டுக்கு வந்த விருந்தாளியைப் போல, அழையா விருந்தாளியாக மழை கொட்ட ஆரம்பித்தது. ஒதுங்க இடமில்லை. உடல் தெப்பமாக நனைந்து விட்டது. இன்னும் 4 நிமிட நடை. தூரம் நான் போயாக வேண்டும். வீட்டுக்கு திரும்புவதானால் ஒரு நிமிடம் போதும். இன்று முதல் பாடமே பரீட்சை ஒன்றோடுதான் ஆரம்பிக்கின்றது...

உங்கள் எழுத்துத் திறமைக்கு ஒரு சவால்! பரிசும் உண்டு. கீழேயுள்ள பந்தியை நீங்கள் தொடர வேண்டும். இலக்கணப் பிழையில் லாமல் இருக்க வேண்டும். தந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி விடயத்தை நீடிக்க வேண்டும். அவ்வளவுதான்.. மறக்காமல் போட்டிப் பிரவேசக் கூப்பனை நிரப்பி, உங்கள் போட்டோ பிரதி ஒன்றையும் அனுப்புங்கள்.

**எங்கே உங்கள் பேனாக்களை கையில் எடுங்கள் பார்க்கலாம். இனி நீங்கள்தான் எழுதி முடிக்க வேண்டும். மறக்க வேண்டாம். பரிசு உண்டு. எனவே சிறப்பாக எழுதுங்கள்.**

விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் : ..............................................
பாடசாலை : ..............................................
வகுப்பு : ..............................................
பெற்றோர் கையொப்பம் : ..............................
முகவரி : ..............................................
..............................................

உங்கள் கதையுடன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புக. தெரிவாகும் சிறந்த கதைக்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

## வாரம் ஒரு பழமொழி

முருங்கையை வைத்தவன் வெறுங்கையோடு போவான்

இந்தப் பழமொழியை கேட்டதும், அட முருங்கை வீட்டுக்கு உதவாததா என்ற எண்ணமே மனதில் எழுகின்றது. பெரியவர்கள் இப்படிச் சொல்லி விட்டுப் போய் விட்டார்களே என்று, வீட்டிலுள்ள முருங்கை மரங்களை வெட்டி எறியத் தொடங்கி விடுகிறோம். முருங்கை இருக்கிற செல்வத்தை எல்லாம் துடைத்தெறிந்துவிட்டு, ஓட்டாண்டியாக்கி, வெறுங்கை-யோடு போகவிடப் போகிறதே என்ற பயம்தான் நம்மை இப்படிச் செய்யத் தூண்டுகின்றது. ஆனால் முருங்கை வீட்டுக்கு செல்வத்தை தரும் என்பதுதான் உண்மை. முருங்கையின் இலை, பட்டை, வேர், பூ, காய் என்று எல்லாமே மருத்துவ தேவைகளுக்கும், உணவிற்கும் பயன்படக்கூடியவை. முருங்கை உண்டு ஆரோக்கியமாக வாழ்பவர், வயதான காலத்திலும் ஊன்று கோல் உதவியின்றி, வெறுங்கையோடு நடந்து செல்வார் என்பதே இதன் உண்மையான அர்த்தம்.

## அட அப்படியா?

மொத்தக் கோள்களின் எண்ணிக்கை 8. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என்பனவே அந்த எட்டுக் கோள்களாகும்.

1. புதன்: சூரியனுக்கு மிக அருகில் உள்ளதோடு, அதனை வேகமாக வலம் வரும் கோள் இதுதான். இதற்கு துணைக்கோள் கிடையாது.

2. வெள்ளி: பூமிக்கு மிக அருகில் உள்ள இது, புவியின் இரட்டைப் பிறவி என்று அழைக்கப்படுகிறது. கோள்களில் மிகவும் வெப்பமான வெள்ளி, தன்னைத்தானே மெதுவாக சுழலும் கோளாகும். இதற்கும் துணைக் கோள் இல்லை.

3. செவ்வாய்: சிவப்பு நிறக் கோளான இது இரண்டு துணைக்கோள்கள் கொண்டது. போபாஸ், டெய்மாஸ் என்று இந்தத் துணைக் கோள்களை அழைக்கிறார்கள்.



# துன்பம் துரத்துவது ஏன்?
## சீதை சொன்ன கதை

நமக்கு ஒருவர் துன்பம் விளைவிக்கும்போது, நாம் அவர்களிடம் கோபம் கொள்கிறோம். பழிக்குப் பழி வாங்கத் துடிக்கிறோம். ஆனால், அது தவறான செயல். நமக்கு ஒரு துன்பம் ஏற்படுகிறது என்றால், அதற்குக் காரணம், நாம் முன் செய்த வினைப் பயன்தான். எனவே, நமக்கு ஒருவர் துன்பம் விளைவிக்கும்போது, நாம் அவரிடம் கோபம் கொள்ளாமலும் பழிக்குப் பழி வாங்க நினைக்காமலும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அசோகவனத்தில் சீதை இருந்த போது, அவளை அரக்கியர்கள் பலர் துன்பப்படுத்தினர். அதற்காக சீதை அவர்களிடம் கோபம் கொள்ளவில்லை. மிகுந்த பொறுமையுடன் சகித்துக் கொண்டாள். தனக்கு நேரிடும் துன்பங்கள் எல்லாம், தன் வினைப்பயன் காரணமாகவே ஏற்படுகின்றன என்று உறுதியாக நம்பினாள்.

இராவண சம்ஹாரம் முடிந்த பிறகு, அசோகவனத்தில் இருந்த சீதா பிராட்டியாரிடம் விவரம் சொல்ல வந்த அனுமன், பிராட்டியை வணங்கி, "தாயே, ஸ்ரீராமபிரான் வெற்றி வாகை சூடிவிட்டார். ரஇாவணன் மாண்டான்" என்று கூறினார்.

அனுமன் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த சீதை, 'அனுமனே, நான் முன்பொரு முறை உயிர் துறக்க நினைத்த நேரத்தில், நீ வந்து எனக்கு ஆறுதல் கூறி காப்பாற்றினாய். இப்போதும் ராமபிரான் பெற்ற வெற்றிச் செய்தியை நீயே வந்து எனக்குத் தெரிவித்தாய். ஏற்கெனவே உனக்கு நான் சிரஞ்சீவியாக இருக்கும் வரத்தைத் தந்துவிட்டேன். முன்பை விடவும் அதிகம் சந்தோஷம் தரும் செய்தியை இப்போது கொண்டு வந்திருக்கிறாய். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றார். அதற்கு அனுமன், 'தாயே, எனக்கு ஒரு வரமும் வேண்டியதில்லை. நான் விரும்புவது ஒன்றேதான். கடந்த பல மாதங்களாக உங்களைப் பாடாகப்படுத்திய இந்த அரக்கிகளை, நான் தீயில் இட்டுக் கொளுத்த வேண்டும். அதற்கு தாங்கள் அனுமதிக்கவேண்டும்" என்று அனுமன் கேட்டுக்கொண்டார்.

ஆனால், அனுமனின் கோரிக்கையில் சீதைக்கு உடன்பாடு இல்லை. எனவே அனுமனைப் பார்த்து, 'அனுமனே, நீ நினைப்பதுபோல் இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தி இருந்தாலும், அதற்காக இவர்களை தண்டிப்பதில் எனக்கு சம்மதம் இல்லை. நான் இப்படி துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம், நான் முன்பு செய்த செயலின் விளைவுதான். பொன்மானாக வந்த மாயமானுக்கு ஆசைப்பட்டு, அதைப் பிடித்து வர என் கணவரை அனுப்பியதும், சென்ற கணவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராமலும், 'லட்சுமணா, லட்சுமணா' என்று அபயக் குரல் எழுப்பியதாலும், பயந்து போன நான், எனக்குக் காவலாக இருந்த லட்சுமணனை அனுப்பிப் பார்க்கச் சொன்னேன். அவர் என் கணவருக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது என்று மறுத்துக் கூறியும், நான் ஏற்றுக்கொள்ளாமல் சுடுசொற்களால் லட்சுமணனைக் கண்டித்துப் பேசினேன். ஒரு பாவமும் அறியாமல், இரவும் பகலுமாக எங்களைக் கண்ணிமைபோல் காவல் காத்த லட்சுமணனின் மனம் நோகும்படி நான் பேசியதுதான்; இங்கே நான் அனுபவித்த துன்பத்துக்குக் காரணம்.

எனவே, நீ அரக்கியர்களை ஒன்றும் செய்துவிடாதே. அவர்கள் அரக்கியர்கள் என்றாலும் பெண்கள். அவர்களுக்குத் தீங்கு செய்து நீ பெரும் பாவத்தைத் தேடிக்கொள்ளாதே" என்று கூறினார். அனுமன் உண்மையைப் புரிந்துகொண்டார்.

நமக்கு மற்றவர்கள் துன்பம் விளைவிக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் நாம் முன் செய்த தீவினைப் பயன்தான் காரணம்.

இதைத்தான் மகாபாரதத்தில் வரும் ஆணிமாண்டவ்யரின் வாழ்க்கையும் நமக்கு உணர்த்துகிறது. சிறுவயதில் அவர் தும்பியின் வாலில் கூரிய முனை கொண்ட தர்ப்பைப் புல்லைச் செருகியதால், பிற்காலத்தில் மன்னன் ஒருவனால் கழுவில் ஏற்றப்பட்டார். மகரிஷியான தனக்கு ஏன் இப்படி ஒரு துன்பம் ஏற்பட்டது என்று ஆணிமாண்டவ்யர் தர்மதேவதையிடம் கேட்டபோது, சிறுவயதில் அவர் தும்பியைத் துன்புறுத்தியதுதான் காரணம் என்று கூறியது.

இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை, 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் பிற்பகல் தமக்கின்னா தாமே வரும்' என்று நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.

எனவே, நமக்கு ஒருவர் துன்பம் விளைவித்தாலும், நம்மை ஒருவர் பழித்துப் பேசினாலும், அதற்குக் காரணம் நாம் செய்த வினைப்பயன்தான் என்பதை உணர்ந்து, நாம் பதிலுக்கு அவரைப் பழிதீர்க்க நினைக்கக்கூடாது.

# மனிதர்களுக்காக காத்திருக்கிறார் தேவன்



ஒரு கிராமத்தில் பெருஞ் செல்வந்தர் ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்த மைந்தன் தகப்பன் சொல்லை மீறாதப் பிள்ளையாக அவர் சொன்ன சொல்லையே கட்டளையாகக் கொண்டு செயற்பட்டு வந்தார். வயல்களில் பணியாளர்கள் மூலம் உழவு செய்து பயிரிடுவது, ஆட்டு மந்தைகளைப் பணியாளர்கள் மூலம் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் செல்வது, அறுவடையான தானியங்களைக் களஞ்சியத்தில் கொண்டு சேர்ப்பது, எஞ்சிய தானியங்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வது என தினம் ஒரு வேலை செய்து வந்தான்.

இளைய மைந்தனான அவனது தம்பியோ.... சோம்பலும், கேளிக்கையுமாக தன் வாழ்நாட்களை வீணாக்கி வந்தான். சிறுவயதிலேயே அவனுக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு. வாலிபப் பருவம் அடைந்ததும் கேட்கவா வேண்டும். திடீர் திடீரென தந்தையிடம் வந்து பெரும்தொகையைப் பெற்றுச்செல்வது, அவற்றைத் தம் நண்பர்களுடன் சேர்ந்து கேளிக்கைகளில் செலவிடுவதுமாக இருந்தான். இதனால், அவனது தகப்பன் பெரும் துயருற்றார். மகனுக்கு அறிவுரைகள் பல சொன்னதுடன் பணத்தின் அருமையையும் எடுத்துக்கூறினார். ஆனால், அவனோ அவையெல்லாவற்றையும் காது கொடுத்துக்கூட கேட்கவில்லை.

ஒருநாள் அவனது நண்பர்கள் கூறிய தீய ஆலோசனைகளைக் கேட்டு, தனியாகத் தொழில் தொடங்கப்போவதாகக் கூறி, தனக்கான பங்கைப் பிரித்துத் தரும்படி தந்தையிடம் கேட்டான். இதைக் கேட்டதும் அவனது தந்தைக்குக் பேரிடி விழுந்தது போலிருந்தது. ஆனாலும், மகன் விடுவதாக இல்லை கொடுஞ் சொற்களால் அவனது தந்தையைத் திட்டித் தீர்த்தான். அன்பு மிக்க அந்தத் தகப்பனும் அவனது பங்கைப் பிரித்துக் கொடுத்தார். அந்த சொத்துகளைப் பெற்றுக்கொண்ட இளையமகன் அவற்றை விற்று காசாக்கி வேறு ஒரு தேசத்தில் புதிதாகத் தொழில் தொடங்கினான். தெரியாத தொழிலில் ஆழம் தெரியாமல் காலை விட்டதாலும், கூடா நட்புகளாலும் வெகுவிரைவிலேயே தனது செல்வங்களை இழந்து நடுத்தெருவுக்கு வந்து விட்டான்.

காலம் செய்த கோலம் என்பார்களே அதுபோல் பெரும் பஞ்சம் ஒன்று வந்தது. கையில் இருந்தவை எல்லாம் இழந்து வறிய நிலையில் இருந்த அவன் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்பட்டான். அவனால் சொந்த ஊருக்குத் திரும்பவும் முடியவில்லை. அந்த ஊரிலேயே இருந்த பெரிய விவசாயி ஒருவரிடம் பன்றிகளைப் பராமரிக்கும் வேலையில் சேர்ந்தான்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)

ஒரு விடயத்தை எப்படிச் சாத்தியமாக்கலாம் எனத் திட்டமிட்டுச் செயற்படுத்துபவனே தலைவன். சாத்தியமாகக்கூடிய விடயத்தையும் செய்யாது அதனைப் பிச்சைக்காரனின் புண்போல் தொடர விடுபவனும், தன்னால் அது செய்யமுடியாமற் போனதற்கான காரணங்களை வரிசையாக அடுக்குபவனும்தான் அரசியல்வாதி.

'அரசியல் கைதிகள் தொடர்பில் மீளாய்வு வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யும் பட்சத்தில் அந்த வழக்கு நடவடிக்கை நீண்டகாலம் இழுபடுவதற்கு தாமே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததாக அமைந்துவிடும். ஒரு நீதிமன்றில் இருந்து இன்னொரு நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றுவது தொடர்பில் மீளாய்வு மனுதாக்கல் செய்யும்போது, அந்த வழக்கு விசாரணை செய்து முடிவதற்கு குறைந்தது ஒன்று அல்லது ஒன்றரை வருட காலம் எடுக்கும். அவ்வாறான வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தால்



- பகலவன் -

# மறதி ஒரு மந்திரம்! அரசியலில் இராஜதந்திரம்!!

ல சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் சொல்லுவார் அந்த வழக்கு முடியும் வரைக்கும் அரசியல் கைதிகளின் விவகாரத்தில் தான் ஒன்றும் செய்ய முடியாது என்றும். நீங்கள் நீதிமன்றம் போய்விட்டீர்கள் நீதிமன்றின் படி நான் செயற்படுவேன் என்று. இதனால்தான் மீளாய்வு வழக்கைத் தாக்கல் செய்யுமாறு நான் ஆலோசனை கொடுக்கவில்லை. ஏனென்றால் அவ்வாறான ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அந்த வழக்கு நடவடிக்கை இழுப்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதால் சட்டமா அதிபர் சொன்னார். பாராட்டத்தில் ஈடுபட்டு வரும் மூன்று அரசியல் கைதிகளின் வழக்குகளையும் மீண்டும் வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றுவதில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று . ஆனால் சாட்சியமளிக்க முன்வந்தவர்கள் தமிழ் பிரதேசத்தில் தாங்கள் வந்து சாட்சியமளிக்க மாட்டார்கள் என்று சொன்னதுதான் வழக்கை அனுராதாபுரத்துக்கு மாற்றுவதற்கான ஒரே காரணம் என்றுகூறினார்."

இவ்வாறு திருவாய் மலர்ந்தருளி இருப்பவர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் வடமராட்சி கிழக்கு உடுத்தனை அ. த. க பாடசாலை கட்டட திறப்புவிழாவுக்கு வருகைதந்திருந்த போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஆடு நனைகின்றதென்று ஓநாய் அழுததாம். நாம் அறிந்தவரை முன்னாள் அமெரிக்கஜனாதிபதி ரீகனுக்கு வந்த பார்கின்சன் நோய் சுமந்திரனுக்கு இன்னமும் வரவில்லை .

அந்தச் செய்தியாளர்கள் தொழிலுக்குப் புதிது என்பதால் முக்கியமான ஒரு கேள்வியைக் கேட்கவில்லை ஆனால் செய்தியாளர்கள் மயிலந்தனை வழக்கை நினைவுபடுத்திக் கேட்காமல் இருக்க வேண்டும் என்று அவர் யேசு பிரானை வேண்டியிருப்பார். அப்படி வேண்டாமலிருந்தால் அவருக்கு அரை பார்கின்சன் நோய்தானும் இருந்திருக்கும். பார்கின்சன் என்பது மறதிநோய் கடந்தகாலம் எதுவும் நினைவுக்கு வராது.

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் கஜேந்திரகுமார் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார் சுமந்திரன். மயிலந்தனையில் தமிழ்மக்களைப் படுகொலை செய்த வழக்கில் எதிரிகளான இராணுவத்தினர் சார்பில் கஜேந்திரகுமார் ஆஜரானார் எனக் குறிப்பிட்டார். தேர்தல் பிரச்சார இறுதிநாளன்றே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார். இது உண்மைக்கு மாறான தகவல். எனவே கஜேந்திரகுமார் உடனேபாதிக்கப்பட்ட

தமிழ்மக்கள்சார்பில ஆஜரான சட்டத்தரணியுடன் தொடர்பு கொண்டு தான் அந்த வழக்கில் ஆஜராகவில்லை என்பதற்கான பதிலை ஆதாரமாக வெளியிட முயற்சித்தார். அந்த விடயத்தை வெளியிட ஊடகங்கள் மறுத்து விட்டன.

தேர்தல் பிரச்சார நாள் முடிந்துவிட்டதால் அது தொடர்பான விடயங்களை வெளியிடுவது சட்டத்துக்கு முரணானது என அவை காரணம் கூறின. அவ்வாறான தில்லுமுல்லுகளைச் செய்தே யாழ்ப்பாணத்தில்கூட்டமைப்பு ஐந்து ஆசனங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் தோல்வி அடைந்தது.

(தமிழ்த்தேசியமுன்னணி ) பின்னர் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கஜேந்திரகுமார், சுமந்திரன் ஆகிய இருவரும் கலந்துகொண்டனர். அதில் சுமந்திரனின் இந்தத் திருகுதாளத்தை கஜேந்திரகுமார் வெளியிட்டார் .

கொஞ்சம் கூட வெட்கமோகூச்சமோ இல்லாமல் அது தனது ராஜதந்திரம் என்ற பாணியில் சுமந்திரன் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். "மயிலந்தனை விவகாரம் என்பது எவ்வளவு பாரதூரமானது. என்பதனை பிரபல ஊடகவியலாளர் இரா. துரைரத்தினம் Published on November 5- 2016-12:55 p

அக்கு தனதுஊடகமான தினக்கதிரில்" கொலைக் குற்ற விசாரணைகளும் சிங்கள யூரிகளின் தீர்ப்புகளும்" என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரையின் சில பகுதிகளை நன்றியுடன் அப்படியே தருகிறோம்மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மயிலந்தனை கிராமத்தில் 1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9 ஆம் திகதி இரவு 35 தமிழ் பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ அதிகாரி டென்சில் கொப்பேகடுவ கண்ணிவெடியில் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில் அன்றிரவு அக்கிராமத்திற்குள் புகுந்த இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை வெட்டியும் சுட்டும் கொன்றனர். 50க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்தப் படுகொலையில் 18 இராணுவத்தினர் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. 85 குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. மட்டக்களப்பில் இவ்வழக்கு விசாரணை நடைபெறுவது தமக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் வழக்கை அனுராதபுரம் அல்லது கொழும்புக்கு மாற்றுமாறு குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினர் கோரினர்.

இதனையடுத்து கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு மாற்றப்பட்டது இதனையடுத்து சிங்கள யூரிகள் முன்னிலையிலேயே இவ்வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் எனக் குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினர் கோரியபோது அக்கோரிக்கையும்

( 17 ஆம் பக்கம் பார்க்க)



# தந்தை செல்வாவின் பரிசுத்த ஆவி பேசுகிறது...

**த**ந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் - (குறள் 67)

மக்களே! நான் கட்சியைத் தொடங்கி தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு 'புது வழி' காட்டியவன் என்ற வகையில் உங்களால் பெருமைப் படலாம் என்று எண்ணியிருந்தேன். மக்களாகிய உங்கள் நடவடிக்கைகள் என்னைப் பெருமைப்படுத்தும் என்று முழுமையாக உங்களை நம்பியிருந் தேன். ஆனால் எனது ஆன்மா மிகவும் வருந்துகிறது. உங்களில் ஒருவரின் நடவடிக்கைகூட என்னைத் திருப்திப் படுத்துவதாக இல்லை. அதுவும் சம்பந்தன் என்னை முழுமையாக கை கழுவி விட்டுவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

அத்துடன் கட்சியின் புது வரவாகப் பார்க்கப்படும், மகனே சுமந்திரன் இன்று உன்னை பற்றியும் உனது நடவடிக்கைகள் பற்றியும் நான் நினைத்துச் சந்தோஷப்படுவதற்கு பதிலாக என் மனம் வேதனைப்படு கிறது. ஒரு கட்சித் தந்தை என்ற முறையில் உன்னை மிகவும் நன்றாக வழி நடத்த வேண்டிய பொறுப்பு எனக்கு இருப்பதாகவே எண்ணி பேசத் தொடங்குகிறேன்.

மகனே சுமந்திரா உண்மையில் நீ யார்? உனது அரசியல் பிரவேசம் எப்படி நடந்தது? எதற்காக கூட்டமைப்புக்குள் உள் வாங்கப் பட்டாய்? தமிழுக்கும், தமிழருக்கும், உனக்கும் என்ன தொடர்பு என்று உன்னிடமும் கேட்டுச் சலித்து விட்டேன். வேறு பலரிடமும் கேட்டு விட்டேன். தெரியாது என்று கையை விரித்து விட்டார்கள். கடைசியாக மாவையிடம் கேட்டேன். அவர் சம்பந்தனை நோக்கிக் கை காட்டினார். சம்பந்தன் இருந்த திசையைப் பார்த்தேன் அவர் கண்ணை மூடி உறங்கிக் கிடந்தார். பாவம் இந்தத் தள்ளாத வயதில் உறங்குவதைத் தவிர அவரால் என்ன செய்ய முடியும்? அல்லது எனது கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பதால் உறங்குவது போல் கிடந்தாரோ என்றும் தெரியவில்லை. யாரிடமும் தக்க பதில் இல்லை எனக் கண்டு, சுரேஷிடம் கேட்டேன். ஐயா கூட்டமைப்பைப் பற்றி வேண்டுமென்றால் நான் ஏதாவது சொல்லலாம். தயவு செய்து தமிழரசுக் கட்சி பற்றி என்னிடம் கேட்க வேண்டாம். அதுவும் சுமந்திரனைப் பற்றி ஊரறிய சொல்லவே மாட்டேன் என்றவர் இரகசியமாக காதில் சொன்னவை எனது காது கூசியது. காதைப் பொத்திக் கொண்டேன். தொடர்ந்து சுரேஷ் என்ன சொல்லி இருப்பார் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது. அவர் சொன்ன ஒன்றை மட்டும் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன்.

"ஐயா... கட்சியில் தலைமையும், பதவிகளும் ஒரு தொண்டனுக்கு வழங்குவதுதானே முறை? அதையே தாங்கள் செய்து வந்தீர்கள். தமிழுக் கும், கட்சிக்கும் தொடர்பில்லாமல் தமிழைப் பேசுகிறார் என்ற அடிப்படையில் எப்படி ஒருவரைத் தமிழரசுக் கட்சிக்குள் கொண்டு வரலாம். சந்திரிகா லக்ஷ்மன் கதிர்காமரைக் கொண்டு வந்தது போல, வலியை அறியாத ஒருவருக்கு பிறரின் வலி எப்படித் தெரியும்? அவர் சில சமயம் கட்சி உறுப்பினர்களைக் கூட மதிப்பதில்லை. அவர்களோடு மதம் பிடித்தவர் போலவும் நடந்துகொள்வது ஏனோ? வீட்டிற்கு வந்த புதிய மருமகளின் பாணியையே அவர் பின்பற்றுவது தான் சகிக்க முடியாது என்கிறார்.

எனது கட்சி அமைக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் என்னோடு நின்ற பணியாளனை அடையாளங் கண்டு அவனிடம் கேட்டபோது அவன் முதலில் "ஓ.. வென அழுதான். ஐயா! கண் கொண்டு பார்க்க, காது கொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு கட்சி நடவடிக்கைகள் இருக்கின்றன. மக்கள் எழுச்சியற்று தூங்கிக் கிடந்த சமயத்தில் பல விடயங்கள் பட்டென்று நடந்தேறி விட்டன. அதில் சுமந்திரனின் அரசியல் பிரவேசமும் ஒன்று. அப்போது யாரும் அவரைக் கண்டு கொள்ளவில்லை. சம்பந்தன் ஐயாவின் அந்தரங்க செயலர் என்பதாகவே பலரும் எண்ணியிருந்தனர். கட்சியில் மற்றவர்களுக்கு இல்லாத ஆங்கிலப் புலமையும், சட்ட அறிவும் அவரிடம் நிறையவே இருப்பதாக நம்பினார்கள் - இப்போதும் சிலர் நம்புகின்றனர் அல்லது நம்புவதாக உணர்கிறார்கள். ஆனால் தேனீக்களின் கூட்டை உடைக்க ஏவப்பட்ட அம்பு என்பதை இன்னும் சம்பந்தர் ஐயா அறியாதிருப்பதுதான் வேடிக்கை என்றான் பணியாளன்.

இருந்தும் சுமந்திரா, நானறிந்த வரைக்கும், எப்படி நீ திருச்சபைக்குள் நுழைந்தாயோ, அப்படி தமிழரசுக் கட்சிக்குள்ளும் நுழைந்துவிட்டாய் மகனே. நுழைந்த நீ சம்பந்தனை மகுடி பாம்பை ஆட்டுவிப்பது போல உன் சொல்லுக்கு சம்பந்தனை ஆட வைப்பது சரியல்ல, முறையுமல்ல. நீ ஓய்வாக வீட்டில் ஆசுவாசமாகப் படுத்திருந்த போது, உன்னைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். உனது உடலில் ஏதாவது வெற்றித் தழும்புகள் இருக்கிறதா வென்று. ஆனால் அரிவரியில் நீ ஆசிரியரிடம் அடி வாங்கிய ஒரு தழும்பும், ஐந்தாம் வகுப்பில் மற்ற மாணவர்களை ஏமாற்றிவிட்டு, வெற்றுக் காணிக்குள் மாங்காய் பறித்துத் தின்னப் போய் அடிவாங்கிய தழும்பை விட வீரத் தழும்புகள் எதையும் காணவ-ில்லை.

நாங்கள் கட்சியை ஆரம்பித்த போது நீ பிறந்திருக்கவும் மாட்டாய் என எண்ணுகிறேன். கட்சிக்காக எத்தனை போராட்டம்? எத்தனை சாலை மறியல்? எத்தனை கடையடைப்பு? எத்தனை தியாகங்கள்? எத்தனை உயிர்ப் பலிகள்? அர்ப்பணிப்புகள் என்று தொடரும் பட்டியலில் இன்று வரை நடைபெற்ற ஏதாவதொரு நிகழ்வில் நீ கலந்து கொண்டதையும் நான் கண்டதில்லை. உனக்குத் தெரியாது மகனே, காங்கிரஸால் பழிக்கப்பட்டு கட்சியிலிருந்து விலகி வேதனைப்பட்ட போது அரவணைக்க யாருமின்றி, நின்று, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்துச் சிறிது சிறிதாக வளர்த்து பிள்ளையைப் போல பிறர் கையில் கொடுத்தேன். என்னை விட அவர்கள் வீரம் மிக்கவர்கள் என்ற எண்ணத்தி லேயே அவர்களை நம்பினேன். இன்று எமது வழி வந்த அவர்கள் இப்படி கட்சியின் பேரால் தமது வயிற்றை வளர்பார்கள் என்று முன்னமே தெரிந்திருந்தால் கருவைக் கலைப்பது போல கட்சியைக் கலைத்திருப்பேன். இவர்கள் முழுச் சமூகத்தையும் முட்டாளாக்கி ஒரு போலி அரசியல் செய்வார்கள் என்று யாருக்கு தெரியும். கடவுளே தமிழனைக் காப்பாற்றுவாயாக.



# நிலவிலே பேசுவோம்

சிறுகதை

– என். கே. ரகுநாதன் –

மாலையிலே மது ஒழிப்புக் கூட்டம் நடைபெற்றது! ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெரும் கூட்டத்திலே ஆண் சிங்கம்போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளையும், அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழி வகைகளையும் அள்ளி விளாசி, இடையிடையே காந்தீயத்தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்புதான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்பொழுது மணி எட்டு இருக்கும். அவருக்கு பசி, அத்துடன் கூட்டத்திற் பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடித்ததும், அறுசுவையுண்டியின் ருசியில் நாவைத் திளைக்கவிட்டபடியே, உள்ளே இருந்த 'ஓர் குலம்' பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஜகத்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த மின்விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார். ஒரு பத்தி கூட வாசித்திருக்கமாட்டார். வெளியே வாசற்பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படித்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் - தசித்துப் போன கூட்டம் - அல்லது 'உழைத்தாற்றான் உணவு' என்ற நிலையிலிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன் தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்றுவிட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

'அடடே! நீயா கந்தா! என்ன சேதி என்றார்.

'உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக...' என்று தயக்கத்துடன் சொன்னான்.

'ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே!' என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

'இன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்களையும் கூப்பிட்டு...' வார்த்தையை முடிக்காமல் வாசற் பக்கம் திரும்பி, அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒரு கணம் திக்கு முக்காடினார். மனதிலே ஒரு பரபரப்பு தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப்புருவங்களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

'வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக்கூடாத விடயங்கள். மனைவி மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அதோ பார்! வெளியே நல்ல நிலவு! அத்துடன் பால் போன்ற மணல். அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம். வா!' என்று அவன் பதிலை எதிர்பாராமல் கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான். பின், வாசலில் நின்றவர்களையும் அழைத்துக்கொண்டு, சற்றுத் தூரம் போய் ஒரு நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

'வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக்கூடாத விடயங்கள். மனைவி மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அதோ பார்! வெளியே நல்ல நிலவு! அத்துடன் பால் போன்ற மணல். அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம். வா!'

வந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில். ஊர் முழுவதும் 'மது ஒழிக' என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி...?

மது ஒழிப்புக் கூட்டத்திலே, சிவப்பிரகாசம் காரசாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே, அவரிடமே வந்து சேர்ந்தார்கள். தமது ஜீவப் பிரச்சினைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

'....நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மதுவினால் உலகத்துக்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக்கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல. ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம். 'எக்ஸைஸ்' உத்தியோகத்தர்களுக்கு சப்பளத்துக்கு மேலே 'கிம்பளம்' கொடுத்தும் ஒளித்தோடுகிறோம்..... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத்தான் நாம் வாழ வேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும் போது, நமது நிலைமையை எண்ணிப்பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில்தான்! என்றாலும்...' என்று இழுத்தான் அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

'ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி!' என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

'நமக்கு வேறு தொழில் வேண்டும்!'

சிவப்பிரகாசம் சிரித்தார்.

'இதென்ன பிரமாதம்? இந்தப் பரந்த உலகத்தில் தொழிலுக்கா பஞ்சம்?' என்றார்.

'எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனதான்: என்றாலும் நாம் செய்வது சாத்தியமா?'

'ஏன்?'

'ஒரு தேநீர்க் கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேநீர் குடிப்பார்களா? அல்லது ஒரு பலசரக்குக் கடை வைத்தாற்கூட நம்மிடம் வந்து சாமான் வாங்குவார்களா? இரும்புக் கடையில்கூட நம்மவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டார்களே: இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம் வேண்டாம்: என்னை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு கூலியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலையில்...' என்று அந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அப்போதும் அவர் சிரித்தார்.

'அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விடயம். இவைதான் தொழில்களா? வேறு கைத்தொழில் செய்கிறது!'

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்துவிட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்:

( 18 ஆம் பக்கம் பார்க்க)






# கழிக்கும் பொருட்களில் கலைவண்ணம்

உங்கள் கலை உணர்வை வெளிப்படுத்த ஆயிரக்கணக்கான வழிகள் இருக்கின்றன. திறமை இருந்து விட்டால், அது பல எளிய வழிகளில், வெளிப்படுகின்றது. இங்கே வெறும் வைக்கோலை உபயோகித்து எப்படி, ஒருவரது கலைத் திறமையை வெளிப்படுத்தலாம் என்பது தெளிவாகின்றது.

அறுவடை முடிந்ததும், வைக்கோலை வயலில் சிறுகுன்று போல குவித்து வைப்பது நம் நாட்டில் நடப்பது. இதையே ஜப்பானில் என்ன செய்கிறார்கள் என்று அறியவரும் போது ஆச்சரியமே எஞ்சுகின்றது. கழிக்கும் பொருட்களில் உள்ள கலை உணர்வு நம்மை வியக்க வைக்கின்றது. அறுவடைக் காலம் வந்ததும், அதை ஒரு திருவிழாவாக இவர்கள் கொண்டாடுவது வழமையாகி விட்டது. இதைத் தங்கள் மொழியில் 'வறா'கலைத் திருவிழா என்று அழைக்கிறார்கள். வைக்கோலையே ஜப்பானிய மொழியில் வறா என்கிறார்கள். இந்த வைக்கோலை மீள் சுழற்சிமுறையைப் பயன்படுத்தி, கால்நடைகளுக்கு உணவாக்குவதோடு, மண்ணுக்கு உரமாகவும் பயன்படுத்துகிறார்கள்.

அது மாத்திரமல்ல ஜப்பானின் நிகற்றா பிராந்தியத்தில், வைக்கோலின் உதவிகொண்டு இராட்சத அளவிலான சிங்கம், கொரில்லா, முதலை போன்றவற்றை செய்து, இத் திருவிழா தினமன்று பார்வைக்கு வைக்கின்றார்கள். 2008இல் ஆரம்பித்த இந்தவிழா, இந்த ஆண்டு பத்தாவது தடவையாக நடந்து முடிந்துள்ளது. இங்குள்ள பல்கலைக்கழக மாணவர்களே இந்த மிருகங்களை வடிவமைக்கின்றார்கள். இந்த வைக்கோல் மிருகங்கள் ஒக்ரோபர் 31வரை பார்வைக்கு வைக்கப்பட்டு பின்பு, அகற்றப்படுவது வழமையில் உள்ளது.

**கலைஞனுக்கு புல்லும் ஆயுதம்!**



# வாசம்சொல் !வகை (நிற) சொல்கிறேன்


நம்மைச் சுற்றி வாழ்பவர்களுக்கு, பல அரிய திறமைகள் எப்படியோ வந்து சேர்ந்து விடுகின்றன. அட எப்படி இதைச் சாதிக்கிறார்கள் என்று எம்மை தினமும் ஆச்சரியத்தில் மூழ்க வைக்கும் பலர் நம்மைச் சுற்றி வலம் வருகின்றார்கள். இந்த 11 வயதுச் சிறுமியால் இது எப்படிச் சாத்தியப்படுகின்றது என்று நம்மை ஆச்சரியப்பட வைக்கும் வகையில் இந்தச் சிறுமியின் செயற்பாடுகள் அமைகின்றன. நேபாளத்தைச் சேர்ந்த இந்தச் சிறுமியின் பெயர் டீப்ரிரெக்மி. ஒன்றின் வாசத்தைக் கொண்டு அதன் நிறத்தைச் சொல்லும் அதீத திறமை இவளிடம் இருக்கின்றது. கண்களைக் கட்டிய நிலையிலும், இவளது இந்தத் திறமை வெளிப்படுவது விந்தைதான்.

இது எப்படிச் சாத்தியப்படுகின்றது? இந்த அதீத சக்தியை சினஸ்தேஸியா என்ற மருத்துவப் பெயரால் அழைக்கிறார்கள். சினஸ்தேஸியா உள்ளவரின் புலன்கள் குழப்ப நிலையில் காணப்படுகின்றன. இவர்களின் கண் வழியாக நகரும் புலன், கிளர்ச்சிகளைத் தூண்டி, மூக்குவழியாகக் காண்பிக்கின்றது. கண் பார்ப்பதை, மூக்கு வழியாக சொல்லும் திறமை இப்படித்தான் உருவாகின்றது. இந்தத் திறமை இறைவன் கொடுத்த ஒரு வரமென்று இந்தச் சிறுமி நம்புகிறாள். தனது இந்தத் திறமையை வளர்த்தால், கண்பார்வை பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த வழியிலாவது உதவ முடியுமென இவள் திடமாக நம்புகிறாள். நேபாளத்திலிருந்து ஒருவர் இவள் திறமையை ஆதாரபூர்வமாக படமெடுத்து, லண்டன் தினசரி ஒன்றுக்கு அனுப்பியதால்தான் , இவள் திறமை இப்பொழுது வெளிஉலகுக்கு வெளிச்சமாகியுள்ளது.

அமெரிக்க அமைப்பு ஒன்றின் ஆய்வின்படி, உலகில் 2000 இற்கு ஒருவர் என்ற ரீதியில் இந்தப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்கிறது. இதில் பெரும்பான்மையானவர்கள். பெண்கள் என்றும் கூறுகிறார்கள். இதுஏன் வருகின்றது? எப்படி வருகின்றது என்பது இன்னமும் அறியப்படவில்லை என்றாலும், பரம்பரையாக இது வருகின்றது என்பதை மருத்துவ உலகம் ஒத்துக் கொள்கின்றது.

**[illegible]**

# ஆபத்தோடு விளையாடும் ஆடு மேய்ப்பவர்கள்



பச்சைப் புற்தரைகளைத் தேடி, குடிநீர் இருக்குமிடம் நாடிமிருங்கள் தொகை தொகையாக இடம்விட்டு இடம் பெயர்கின்றன என்ற தகவல் நமக்குப் புதியதல்ல. வருடாவருடம் ஆயிரக்கணக்கான காட்டு விலங்குகள் முதலைகளின் பிடியிலிருந்து மீண்டு, தப்பினோம் பிழைத்தோம் என்று தாம் போய்ச் சேரவேண்டிய இடத்தைச் சென்றடைகின்றன. இதேபோல பறவைகளும் பல்லாயிரம் மைல்கள் பறந்து வேறிடங்களுக்குச் செல்கின்றன.

இங்கே மனிதர்கள் தமது கால்நடைகளை காலத்துக் காலம் இடம் மாற்றி வருகின்றார்கள். இவர்கள் போகும் பாதை, ஐரோப்பாவில் மிகமிக அபாயகரமான பாதை என்று இவர்களுடன் கூடச் சென்ற படப்பிடிப்பாளர் கூறி இருக்கின்றார். ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் மலைஉச்சிப் பிரதேசங்களிலுள்ள தமது ஆடுகளை ஒன்று சேர்த்து. பள்ளத்தாக்கிலுள்ள கஹெரட்டி என்ற இடத்தின் புல் வெளிக்கு கொண்டுவருவது என்பது இலேசுப்பட்ட விடயமல்ல. உறைய வைக்கும் கடும் குளிர், தலையைச் சுற்ற வைக்கும் கிடுகிடு பள்ளத்தாக்கு என்றுஆளைப் பயமுறுத்தும் இந்த வெளிக்கு, செம்மறி ஆடுகளைக் கொண்டு வந்து சேர்ப்பது இமாலயப் பணி. உள்ளூர் மதுபானமான சக்கா எனப்படும் மதுபானம் தரும் உற்சாகத்தில்தான், இவர்கள் இப்படியான கடுமையான பணியில் ஈடுபட்டுள்ளார்கள். அல்ப்ஸ் மலைப் பிராந்தியந்திலிருந்து வளைந்து வளைந்து நீளும் அபாயகரமான பாதையில் நடந்து கீழிறங்க சுமாராக 12 மணிநேரம் எடுக்கும் என்றாலும், இதற்கு 2 நாள் பயணம் தேவைப்படுகின்றது. முன்பு சோவியத் ஒன்றியம் என்றிருந்து அதிலிருந்து பிரிந்த ஜோர்ஜியா என்ற நாட்டவர்களே இந்த ஆடு மேய்ப்பர்கள்.

வழியில் ஒரு ஆடு காயப்பட்டு ஒதுங்க நினைத்தால், ஓநாய்க்கு இரையாகும் அபாயம் இருக்கின்றது. அதுமாத்திரமல்ல உறைய வைக்கும் மோசமான குளிரில் அது இறந்து விடலாம். எனவே மெல்லமெல்ல தொடர்ந்து நடக்க வேண்டும் என்கிறார்கள். பயணித்து மூன்றாவது நாளில்தான், இவர்கள் சென்றடைய வேண்டிய சமவெளி வந்து விடுகின்றது. அதற்குள் எட்டுஆடுகள் பலியாகியிருக்கும் என்கிறார்கள் இந்த இடையர்கள்! ஆபத்தோடு விளையாடுவதே இவர்கள் ஜீவனமாகி இருக்கின்றது.

புதுமதி



# மாவீரன் பகத்சிங்

## அடிமை விலங்கை உடைத்தவன்

- வன்னிமகள் -

அடிமை வாழ்வை அறுத்துப்போட்டு சுதந்திரக் காற்றை வீச வைக்க எண்ணிய மாவீரர்களில் பாரத வீரர்களில் ஒருவரே பகத்சிங். ஒரு புரட்சிக்காரனாக, போராளியாக, இந்திய இளைஞர்களின் ஈர்ப்பு மையமாக, தலைவனாக, தேசத்தின் அடையாளமாக, தியாகத்தின் சின்னமாக மாறியுள்ள மாவீரன் பகத்சிங் தனது ஆளுமையாலும் வீரத்தாலும் சிறந்த சிந்தனை ஆற்றலாலும் மகாவீரனாய் விளங்கியவர். இத்தனை அடிப்படைகள் இருந்தாலும் அவரது சிறந்த தலைமைப்பண்பே அவரை தனித்துவமாய் காட்டியது.

அடிமை இந்தியாவின் விலங்கு உடைக்க 23 வயதில் தூக்கு கயிற்றை முத்தமிட்டு இந்திய இளைஞர்களுக்கு விடுதலை உணர்வையும், தேசப் பற்றையும், தியாகத்தையும், வீராவேசத்தையும் கற்றுக் கொடுத்தவர். சுதந்திர இந்தியாவில் பயங்கரவாதியாக, தீவிரவாதியாக சித்தரிக்க முயற்சி செய்தவர்களை அன்றே சின்னாபின்னமாக்கிட மாவீரன் பகத்சிங் கூறிய வார்த்தைகள்... "நான் பயங்கரவாதியல்ல, புரட்சியாளன். தெளிவான எண்ணமும், தேர்ந்த இலட்சியமும், நெடிய செயல் திட்டமும் உடையவன்."

உண்மையான வீரனாக வாழ்ந்து, நாட்டிற்காகப் போராடி மடிந்து போனதால், இவர் 'சாஹீது (மாவீரன்) பகத்சிங்' என அழைக்கப்பட்டார். ஆங்கில ஆட்சியை வெளியேற்றி, இந்தியாவை சுதந்திர நாடாக்க ஆயுதமேந்தி போராடிய புரட்சி அமைப்பான "இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு" அமைப்பின் தலைவர்களுள் ஒருவர் ஆவார். கடுமையான போராளி, தீவிர எதிர்ப்பாளர், உண்மையான ஜனநாயகவாதி என ஆங்கில ஆட்சிக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர் மாவீரன் பகத்சிங்.

பகத்சிங் இளைய புரட்சி இயக்கத்தில் (Young revolutionary movement) இணைந்து அகிம்சைக்கு மாறாக தாக்குதல் நடத்தி ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முனைந்தவர். சாஹீது பகத்சிங்' என அழைக்கப்படும் 'பகத்சிங்' அவர்கள், 1907 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் நாள், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் லயால்பூர் மாவட்டத்திலுள்ள "பங்கா" என்ற கிராமத்தில், சர்தார் கிசன் சிங் என்பவருக்கும், வித்தியாவதிக்கும் இரண்டாவது மகனாக ஒரு சீக்கிய குடும்பத்தில் பிறந்தார்.

பகத்சிங்கின் குடும்பம் ஒரு விடுதலைப் போராட்ட வீரர்களைக் கொண்ட குடும்பம் என்பதால், இளம் வயதிலேயே நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கினார். லாகூரில் உள்ள டி.ஏ.வி பள்ளியில் கல்வியைத் தொடங்கிய பகத்சிங் அவர்கள், லாலா லஜபதிராய் மற்றும் ராஸ் பிஹாரி போஸ் போன்ற அரசியல் தலைவர்களிடம் நட்புறவு கொண்டிருந்தார். 1919 ஆம் ஆண்டு, இந்தியாவின் அம்ரித்சர் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், ஆயுதம் ஏதுமின்றி கூட்டத்தில் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த அப்பாவி மக்களை (ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பாராமல்,) ஆங்கில அரசு, 'ரெஜினோல்ட் டையர்' என்ற ராணுவ அதிகாரியின் தலைமையில் கொன்று குவித்து அவ்விடத்தினை இரத்தக் களரியாக்கியது. அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலைக் கண்டு நாடே கொதித்தது. இந்தக் கொடூரமான படுகொலை, பகத்சிங்கின் மனதில் பெரும் மாற்றத்தை விதைத்ததோடு மட்டுமல்லாமல், இரத்தம் படிந்த மண்ணை ஒரு புட்டியில் அடைத்து எடுத்துவந்து தன்னுடன் வைத்துக்கொண்டு, வெள்ளையர்களை விரட்டும் சபதத்தைப் பூணவும் வைத்தது. தன்னுடைய பதின்மூன்று வயதில், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்த பகத்சிங் அவர்கள், 1922 ஆம் ஆண்டு கோரக்பூரில் நடந்த "சௌரி சௌரா" வன்முறைக்கு எதிராக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தியபோது, பகத்சிங் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். 'அகிம்சை வழியில் சென்றால் சுதந்திரம் பெறமுடியாது, ஆயுதம் தாங்கினால் மட்டுமே சுதந்திரம் பெறமுடியும்!' என்ற முடிவுக்கு வந்தார். 1924 ஆம் ஆண்டு, சசீந்திரநாத் சன்யால் என்பவரால் தொடங்கப்பட்ட "இந்துஸ்தான் குடியரசுக் கழகம்" என்னும் அமைப்பில் இணைந்தார். பிறகு 1926ல் பகத்சிங், சுகதேவ், பகவதிசரண் வோரா, எஷ்பால் போன்றோர் இணைந்து "நவ்ஜவான் பாரத் சபா" என்ற இளைஞர் அமைப்பை நிறுவினர்.

"சைமன் கமிஷனை" எதிர்த்து காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அந்த போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதிராய் பொலிஸாரின் தடியடியில் இறந்தார். இதனால் கோபமுற்ற பகத்சிங்கும், ராஜகுருவும் இணைந்து, லாலா லஜபதிராய் இறப்புக்கு காரணமாயிருந்த காவலதிகாரியான சாண்டர்ஸை சுட்டுக் கொன்றுவிட்டு தலைமறைவாயினர். அதே நேரத்தில், ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்து தொழிலாளர்கள் தீவிரமாகப் போராடினர். இதனால், அவர்களை ஒடுக்க நினைத்த ஆங்கில அரசு "தொழில் தகராறு சட்ட வரைவு" என்ற ஒன்றை கொண்டுவந்தது. 'இச்சட்ட வரைவை ஏற்காத பகத்சிங் "சென்ட்ரல் அசெம்பிளி ஹாலில்" குண்டு வீசுவதென்று தீர்மானித்தார். 1929 ஆம் ஆண்டு, ஏப்ரல் 8 ஆம் தேதி, இச்சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பொழுது, குண்டுகளை வீசினர். இதனால் பகத்சிங், ராஜகுரு, மற்றும் சுகதேவ் ஆகிய மூன்று பேரும் குண்டு வீசிய வழக்கில் கைதுசெய்யப்பட்டனர். அவர் சிறையில் இருந்த காலத்தில் சில புத்தகங்களை எழுதியுள்ள போதும் அவை எதுவும் வெளிவரவில்லை.

பாபா ரண்வீர் சிங் என்கின்ற சீக்கிய சுதந்திரப் போராட்ட வீரன், பகத் சிங் மீது கொண்டிருந்த அளவற்ற பாசத்தின் காரணமாக, 'நீ மரண தண்டனை பெற்று, தூக்குத் தண்டனைக்குச் செல்லப் போகிறாய் வாழ்நாளெல்லாம் நீ ஆண்டவனை வழிபடாமல் நாத்திகம் பேசி வந்தாய் எனவே, இந்தக் கடைசி நேரத்திலாவது நீ கிரந்தங்களைப் படிக்க வேண்டும், நீ இறைவனை நெருங்க வேண்டும், கடவுளை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வாதாடினார்.

இருவருக்கும் இடையில் நீண்டநேரம் விவாதம் நடைபெற்றது. அந்தக் கருத்தை பகத்சிங் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆத்திரப்பட்டு தன் கருத்தை ஏற்கவில்லை இவன், கடைசி நேரத்தில்கூடக் கடவுளை நாடவில்லை என்பதால், புகழ் போதை உன் கண்ணை மறைக்கிறது, அதனால் ஏற்பட்ட திமிர் உனக்கு அகந்தையைத் தந்து இருக்கிறது, கடவுளுக்கும் உனக்கும் இடையில் அந்த அகந்தையும் திமிரும் கருந்திரையாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டு, அந்தக் ரண்வீர் சிங் பாபா வெளியே போய்விட்டார்.

இதன் காரணமாகத்தான் "Why I became an atheist" நான் ஏன் நாத்திகன் ஆனேன்? என்று பகத் சிங் எழுதுகிறார். மிகச்சிறந்த சிந்தனையாளன் பகத்சிங். தீர்க்கமான சிந்தனையாளன். ஆகவேதான் நான் ஏன் நாத்திகன் என்று ஆங்கிலத்தில் எழுதினார். ஆங்கிலம், இந்தி, உருது, பஞ்சாபி நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர் பகத்சிங். அவர் எழுதிய நூல் கையெழுத்துப் பிரதியாக சிறையில் இருந்து வெளியே கடத்தப்பட்டது. அப்படிக் கடத்தப்பட்ட நூல்கள் மொத்தம் ஆறு. மரண தண்டனைக்கு முன்பு அவர் எழுதிய ஆறு நூல்கள் வெளியே கடத்தப்பட்டன. அதில் ஒன்று நான் ஏன் நாத்திகன். அடுத்தது 'கனவுலகத்துக்கு ஒரு அறிமுகம்.' இந்த இரண்டு நூல்கள்தான் கிடைத்தன. இன்றைக்கு இருக்கிறது. அவர் எழுதிய இன்னொரு நூல், 'இந்தியாவில் புரட்சிகர இயக்கத்தின் வரலாறு.' கிடைக்கவில்லை, எவரிடமும் இல்லை. 'சோஷலிச கோட்பாடு' எனும் நூல் பகத்சிங் எழுதியது கிடைக்கவில்லை. பகத்சிங் தன்னுடைய "சுயசரிதை" என்ற பெயரில் எழுதிய நூல் கிடைக்கவில்லை. "At the door of Death" மரண வாசலில் என்ற தலைப்பில் எழுதிய புத்தகம். அதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், இந்த ஆறு நூல்களும் சிறையில் இருந்து இரகசியமாக வெளியே அனுப்பப்பட்டன. இந்த நான்கு புத்தகங்களும் சிறையில் இருந்து வெளியே கடத்தப்பட்டு ஜலந்தரில் இருந்த குமாரி லஜ்ஜாவதி என்பவரிடம் அனுப்பப்பட்டு இருந்தது. அவர் அவற்றை 1939 இல் விஜய்குமார் சின்கா என்பவரிடம் ஒப்படைத்திருந்தார். 1939 இல் உலகப்போர் மூண்டதும் தன் வீடு சோதனையிடப்படலாம் என்று எண்ணி - பகத்சிங் எழுதிய நூல்களின்

( 17 ஆம் பக்கம் பார்க்க)

# மா.நன்னன் தனிநபர் தமிழியக்கம்

மூத்த தமிழறிஞர், முதிர்ந்த சிந்தனையாளர், அன்பு கனிந்த உள்ளமும் அறச் சீற்றமும் கொண்டவரான மா.நன்னனின் மறைவு தமிழருக்கும், தமிழ் மொழிக்கும் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு. வழக்கமாகச் சொல்கின்ற வார்த்தையல்ல இது. உண்மை.

ஸ்ரீமுஷ்ணம் அருகில் காவனூர் எனும் சிற்றூரில் 1924 ஜூலை 30 இல் பிறந்தவர் நன்னன்.



– ஞானச்செல்வன் –

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் ஆகிய பின் ஆய்வுகள் பல செய்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தொடக்கப் பள்ளி ஆசிரியராகக் பணி தொடங்கி,ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியராக, பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியராக, கலைக் கல்லூரிகளில் பேராசிரியராக, நிறைவாக மாநிலக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். எனினும், இறுதிவரை அவரது தமிழ்ப் பணி ஓயவில்லை.

**எண்ணும் எழுத்தும்**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநராகவும் மூன்று ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். அப்போது அந்த அலுவலகம் பாரிமுனைப் பகுதியில் குறளகம் கட்டிடத்தில் இயங்கிவந்தது. நான் திருவாரூரில் பணியாற்றியபோது அலுவலகத்தில் இருமுறை சந்தித்து உரையாடியது மறக்கவே முடியாதது. வாழ்நாள் முழுவதும் தமிழ்ப் பணியாற்றியிருப்பினும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் (இன்றைய 'பொதிகை') 'எண்ணும் எழுத்தும்' என்ற கல்வி ஒளிபரப்பு மிக முக்கியமானது. 17 ஆண்டுகள் ஒளிபரப்பான அந்த நிகழ்ச்சி மூலம் நேயர்களுக்குத் தமிழைச் சிறப்பாகக் கற்றுக் கொடுத்தார். வகுப்பில் மாணவரோடு பேசி, பாடம் நடத்துதல்போல் நடத்து எளிமையாக அந்தப் பெரும் பணியைச் செய்தார். அந்த நிகழ்ச்சி வாயிலாகப் பெரும் புகழ் பெற்றார். பொதிகையில் நானும் 'தவறின்றித் தமிழ் பேசுவோம்' எனும் தொடர் நிகழ்ச்சி யில்மூன்றாண்டுகள் தமிழைக் கற்பித்தேன். ஏழு ஆண்டுகள் ஒளிபரப்பான அந்த நிகழ்ச்சி வெற்றி பெற்றதற்கு அவர் ஏற்படுத்திய தாக்கம் முக்கியமான காரணம்.

**அறச் சீற்ற நூல்கள்**

மிகச் சிறந்த ஆசிரியராகவும், 'நல்ல உரைநடை எழுத வேண்டுமா?', 'தவறின்றித் தமிழ் எழுதுவோம்', திருக்குறள் தொல்காப்பியம் உரை விளக்கங்கள், பெரியாரியல் நூல்கள் என 60-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய எழுத்தாளராகவும், சிறந்த மேடைப் பேச்சாளராகவும் நன்னன் விளங்கினார். பெரியாரின் கருத்துகளைக் கால வரிசையிலும், பொருள் வரிசையிலும் திரட்டி, அவர் எழுதிய 'பெரியார் கணினி' நூல் மிகவும் முக்கியமானது. நாட்டு விடுதலைக்கு முன் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்திலும், தமிழிசைக்கான கிளர்ச்சிப் போராட்டங்களிலும், ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். 'தமிழ்ச் செம்மல்' விருது, தமிழக அரசின் பெரியார் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்றுள்ளார். மக்கள் தொலைக்காட்சியில் 'தமிழ்ப் பண்ணை', 'அறிவோம் அன்னை மொழி' தொடர் நிகழ்ச்சிகள் வாயிலாக நல்ல தமிழை வளர்த்தார். அவையெலாம் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாயின. மக்கள் தொலைக்காட்சியில் 'தமிழ் பேசு தங்கக் காசு', 'தமிழ்முற்றம்' நிகழ்ச்சிகளை நான் செய்ததற்கு முன்னோடி நன்னன்தான்! அவருடைய 'எழுதுகோலா? கன்னக்கோலா?', 'செந்தமிழா? கொடுந்தமிழா?' போன்ற நூல்கள் அறச் சீற்றம் கொண்டவை.

சிறந்த தமிழ்ப் பெருமகனார் இன்று நம்மை விட்டுச் சென்றாலும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நின்று அவர் புகழை நிலை நிறுத்தும். தன்னிகரிலாத நன்னன் புகழ் வாழ்க!

## மாவீரன் பகத்சிங்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்துப் பிரதிகளை தன் நண்பர் ஒருவரிடம் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூறி ஒப்படைத்தார். ஆனால், 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கக் காலத்தில் அடக்குமுறைக்கு அஞ்சிய அந்த நண்பர் அக்கையெழுத்துப் பிரதிகளை அழித்துவிட்டார்.

ஒரு போராளியின் வாழ்க்கை என்பது வெறும் சரித்திரம் மட்டுமல்ல, அது ஒரு பாடமும் கூட. இன்றைய இந்தியாவில் எத்தனையோ இளைஞர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் பகத்சிங் வாழ்க்கை போற்றத்தக்க ஒன்றாகும். விடுதலைப் போராட்ட உணர்வுகளை இளைஞர்கள் மனதில் விதைத்திட, தன் மரணத்தையே பரிசாகத் தந்த மாபெரும் போராளி. வாழ்வதன் மூலமாக மட்டுமல்லாமல், இறப்பதன் மூலமாகவும் ஒரு சகாப்தத்தினை உருவாக்க முடியும் என வாழ்ந்துக் காட்டியவர். அவர் வாழ்ந்த வாழ்க்கைக்காலம் குறுகியது என்றாலும் நூற்றாண்டுகளைக் கடந்து உலகம் அவரது பெயரைச் சுமந்து நிற்கும் என்பது உறுதி.

மகாவீரர்களின் மறைவு என்பது ஒரு போதும் தோல்வியாகாது. வரலாற்றின் தடமாகவும் விடுதலையின் தீயாகவும் ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் அந்த நெருப்பு கனன்றுகொண்டே இருக்கும். எமது தானைத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் கூட இதனை ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். 'எமக்கான இறுதிபோர் என்பது ஒரு நாட்டு எதிரியுடன் மட்டுமானதாக இருக்காது. வெவ்வேறு நாட்டவர்களுடன் மோதி அதனால் ஏற்படும் அழிவின் பின்னரே எமக்கான சுதந்திர தேசம் எம் கரம் கிட்டும் எனக்கூறியுள்ளார்.

முள்ளிவாய்காலில் எழுதப்பட்டது முடிவின் சரித்திரம் அல்ல, சுதந்திர தமிழீழத்திற்கான அறைகூவல்.

## மறதி ஒரு மந்திரம்!...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளப்பட்டு சிங்கள யூரிகள் முன்னிலையிலேயே வழக்கு விசாரணை நடைபெற்றது. சாட்சிகள் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வந்தபோதிலும் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன பாதிக்கப்பட்ட மயிலந்தனை மக்கள் கொழும்புக்கு சென்று சாட்சியமளித்தனர்.

இறுதியாக 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என அறிவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். சிங்கள யூரிகள் அனைவரும் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினர் குற்றம் அற்றவர்கள் என்றும் அவர்கள் எந்த நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர் என்றும் யூரிகளின் முடிவின்படி இந்த வழக்கை தள்ளுபடி செய்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் எனத் தீர்ப்பு வழங்குவதாக கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

யூரிகள் வழங்கிய தீர்ப்பில் திருப்தி கொள்ளாத மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா யூரிகள் மீண்டும் நன்றாக ஆலோசித்து முடிவுக்கு வருமாறு ஆலோசனை வழங்கி சில மணிநேர அவகாசத்தையும் வழங்கினார். இந்த வழக்கில் போதிய சாட்சிகள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் யூரிகளுக்கு நீதிபதி ஆலோசனை வழங்கினார். ஆனால் சிங்கள யூரிகள் ஆலோசித்து விட்டு மீண்டும் வந்து குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினர் நிரபராதிகள் என்றும் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் உறுதியாக தெரிவித்தனர். இதனையடுத்தே யூரிகளின் முடிவின்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்"

மயிலந்தனை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். இராணுவத்தினர் . அதாவது சிங்களவர். பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தமிழர்கள். மட்டு. மேல் நீதிமன்றில் நடைபெற்ற இவ்விசாரணைகளை எதிரிகளின் வேண்டுகோளின்படி கொழும்புக்கு மாற்ற முடிகிறது. யுத்தம் கொடூரமாக நடந்து கொண்டிருக்கையில் மட்டக்களப்பில் இருந்து சாட்சிகளைக் கொழும்புக்கு கொண்டு செல்ல முடிகிறது. யூரிகளையும் சிங்களவர்களாக நியமிக்க முடிகிறது.

"நன்றாக அலோசித்து முடிவுக்கு வருவார்கள். போதிய சாட்சிகள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என மேல் நீதிபதிகூறியதும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவர் தமிழர் . ஆனால் அரசியல் கைதிகளின் விடயத்தில் மட்டும் இதற்கு மாறான முடிவு எடுக்கப்படுகிறது. இதையெல்லாம் ஜனாதிபதிக்கும் , சட்டமா அதிபருக்கும் சுட்டிக்காட்டி விளங்கப்படுத்த சட்டத்தரணியான சுமந்திரனால் முடியாதா?

மயிலந்தனை படுகொலையாளிகளுக்கு ஒரு நீதி - அரசியல் கைதிகளுக்கு ஒரு நீதியா?

இது வேண்டுமென்றே செய்யும் அநீதி . ஏற்கெனவே தென்னிந்திய திருச்சபை தொடர்பான வழக்கொன்றில் (கிளிநொச்சி நீதிமன்று) ஒரு பகுதியினரை இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குறிப்பிட்டார் சுமந்திரன்,

ஆட்சேர்ப்பு தொடர்பான விடயத்தில் புலிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தவர் இவர் . தமிழர் தரப்பால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அரசு உடனடியாக நிறைவேற்றியது. என்றால் இதுதான் முதல் தடவை. கணேசசுந்தரம் கண்ணதாசன் என்பவருக்கு ஆயுள்தண்டனை கிடைத்தது. இந்த சுமந்திரனிடம்தான் அரசியல்கைதிகளின் விவகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பூனைகளிடம் எலிகளை ஒப்படைத்தது போல்.

சுமந்திரன் விஞ்ஞான பூர்வமாக வாதிட்டார் என்றுகூறவும் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் உள்ளன. என்ன விஞ்ஞானம் அது? விளையாட்டு விஞ்ஞானம் கருணா உட்பட ஆடும் ஆளும் தரப்பு எம். பிக்களுடன் கிரிக்கெட் ஆடி மகிழ்ந்தவரல்லவா இவர். அதையும் தனது இராஜதந்திரம் என்று கொழும்பு மகசின் புர் வாட்டில் உள்ள அரசியல் கைதிகளிடம்கூறித் தனது முதுகில்தானே தட்டிக் கொண்டவர் .

கோத்தபாயவுடன் தான் டின்னரில் கலந்துகொண்டவர் என்று பெருமையாகப் பேசிக்கொண்டவர்.

இவர் அரசியல் கைதிகளின் விவகாரத்தை எப்படிக் கையாளுவார்? பல்கலைகழக மாணவர் அமைப்பின் அழைப்பை நிராகரித்த விதம்எல்லாவற்றையும் புரிய வைக்கிறது.

இக்கட்டுரையின் முதல் பந்தியை மீண்டும் படிக்கவும்.

## நிலவிலே பேசுவோம்... (14ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஆமாம்! அதெல்லாம் வேறு விடயங்கள். உங்களுக்கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்த வயதில் நான் வேறு புதுத் தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலம் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாயிருக்கும். தொழில் பழகுகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நாளும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்க வேண்டியதான்! அப்படித்தானே உங்கள் திட்டம்?'

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். எனினும் சமாளித்துக்கொண்டு, 'ஆத்திரப்படாதீர்கள்! நீங்கள் ஒருங்கே திரண்டு உங்கள் தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுச் சேர்க்க வேண்டாம். கருப்ப நீர் இறக்குங்கள். ஒரு சீனித் தொழிற்சாலை நிறுவித் தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டுவிடப் போகிறார்களா?' என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக் குரல் கேட்டது.

'அதொன்றும் வேண்டாம், மதுவினால் நன்மையோ தீமையோ! நமது சாதி கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனபடியால்தான் மது விலக்கு வேண்டுமென்றீர்கள். நீங்கள் மதுவை ஒழியுங்கள், காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசி கிடந்து சாகிறோம்.

தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்து விட்டால் தீண்டாமை யும் கொஞ்சம் ஒழிந்துவிடும். உங்களுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய், அதே நேரத்தில் 'ஜின்'னும், 'பிரண்டி'யும் மருந்துக் கடைகளில் விலைப்படட்டும், மருந்து என்ற பெயரில்!'

'சைச்சை! இது தவறான வாதம்! அப்படி எண்ணவே கூடாது!'

'பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மது ஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே. முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?' என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாகி விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

'நாங்கள் போய் வருகிறோம். சிந்தித்து நல்லதைச் செய்யுங்கள். 'மதுவிலக்கு அவசியம் வேண்டும்!" அதே நேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழவேண்டும். இந்த அடிப்படையில் தொண்டாற்றுங்கள். உங்களுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்' என்று சொல்லிவிட்டு நடந்தார்கள்.

'வெளியே நல்ல நிலவு - அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம்!' என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை.

## மனிதர்களுக்காக... (11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றின் கொட்டிலுக்கு அருகிலேயே இருந்த குடிலில் தங்கிக் கொண்டான். ஆனால், அவனுக்கு வழங்கப்பட்ட உணவோ மிகவும் குறைவாகவே இருந்தது. பசியின் கொடுமையில் பன்றிகளுக்கு இருந்த தவிட்டைத் தின்றான். அப்போதுதான், தன் தந்தையைப்பற்றி நினைத்துப் பார்த்தான்.

'என் தந்தையாரின் அரண்மனை போன்ற மாளிகையில் அவரது ஏவலாளிகள் எங்கள் வீட்டின் அறுசுவையான உணவை உண்பார்களே... அவரது பேச்சைக் கேட்காமல் வந்ததன் கொடுமையை இப்போது நான் அனுபவிக்கிறேனே' என வருந்தினான். இரவு முழுவதும் கண்ணீருடன் தனது படுக்கையில் அழுது புரண்டு கொண்டிருந்தான். உறக்கம் இல்லாமலிருந்ததால் முகமெல்லாம் வீங்கிப் போயிருந்தது. காலையில் கண் விழித்ததும் அவனது புதிய எஜமானரிடம் தன் கதையைக் கூறி பணியிலிருந்து விலகி தனது ஊருக்குப் புறப்பட்டுப் போனான்.

பல நாள்கள் பல மைல்கள் நடந்து பசியும் தாகமுமாக அவனது சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். மாலைவேளையில் வழக்கம்போல் தனது வீட்டு மாடியிலிருந்த பால்கனியில் நின்றவாறே, 'தனது இளையமகன் என்றாவது வருவான்' என அன்றும் காத்திருந்தார் அவனது தந்தை. தூரத்தில் தன் மகன் வருவதைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன் தனது மகனை அன்போடு வரவேற்க இறங்கி ஓடோடி வந்தார்.

அப்போது, 'தகப்பனே! இறைவனுக்கு எதிராகவும் உங்களுக்கு முன்பாகவும் பாவங்கள் பல செய்தேன். இனி, நான் உங்களுடைய பிள்ளை அல்ல. அதற்குரிய எவ்வித் தகுதியும் எனக்கில்லை, உங்கள் ஏவலாளிகளில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளுங்கள்" எனக் காலில் விழுந்து அழுது அரற்றினான் அந்த இளைய மகன்.

தன் மகனை ஆரத்தழுவிக் கொண்டு, 'வழிதவறிப் போன ஆட்டைப்போல் காணாமல்போன என் மகன் என்னிடத்தில் திரும்பி வந்துவிட்டான்" எனச் சத்தமிட்டவாறு தனது ஆனந்தத்தை வெளிப்படுத்தினார். என் மகனின் வருகையை சிறப்பிக்கும்விதமாக கொழுத்த கன்றுக்குட்டியை வெட்டி விருந்து தயாரியுங்கள். விலை உயர்ந்த ஆடைகளால் அவனை அலங்கரியுங்கள்" எனத் தன் ஏவலாளிகளுக்கு ஆணையிட்டார்.

இப்படித்தான் ஆண்டவரும் நாம் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் அவற்றை நாம் உணர்ந்து மனம் திருந்தினால் நம்மை அன்போடு ஏற்றுக்கொள்ள காத்திருக்கின்றார். ஆனால், செய்த தவற்றை எண்ணி மனம் வருந்தினால் மட்டும் போதாது. மீண்டும், எப்போதும் அந்தத் தவற்றைச் செய்யாமல் இருக்க வேண்டும் என்கிறார் இயேசு கிறிஸ்து.

## ரோஹண விஜயவீர...? (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜயவீர வைத்த இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றிய வகுப்பில் மலையக மக்கள் எப்போதும் இந்தியாவின் விசுவாசிகள் எனவும் அவர்கள் இலங்கையின் உழைக்கும் மக்களின் நேச சக்தியாக இருக்க முடியாதென வும் குறிப்பிடுவார். இழப்பதற்கு எதுவுமேயில்லாத விவசாயத் தொழிலாளர்களாகிய மலையக மக்களின் புரட்சிகரத் தன்மையை நிராகரிப்பது நிச்சயமாக வலதுசாரி இனவாத நோக்கம் கொண்ட நச்சுத்தனமான பிற்போக்கு வாதமாகும்.

1970ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியிருந் தது. பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுதல், அமெரிக்க எண்ணெய் விநியோக நிறுவனங்களைத் தேசிய மயமாக்கல், வெளிநாட்டு உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி விவசாயிகள் வாழ்வை வளப்படுத்தல் போன்ற பல முற்போக் கான விடயங்களை அது மேற்கொண்டிருந்தது. அந்நிய ஏகாதிபத்தியங்களின் விசுவாசியான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை விழுத்தப் பல முனைகளில் வேலை செய்தது. அதன் ஒரு பகுதியாக ஜே.வி.பியின் புரட்சிக்கு மறைமுகமாக ஆதரவும், ஊக்கமும் வழங்கியது.

அரசுக்கு எதிராகப் புரட்சி ஆரம்பித் தால் அரசு தன்னைத் தானே பாதுகாக்க அதைக் கர்ணகடூரமாக அடக்கும். அதனால் பல சிங்கள இளைஞர்கள் உயிரிழப்பர். இதனால் மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது வெறுப்பு ஏற்படும். அதேவேளை இளைய தலைமுறையில் ஒரு பகுதி அழியும்போது, சில காலத்துக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் எழுச்சி பெறமுடியாது. 1971 கிளர்ச்சி மூலம் ஜே.ஆரின் இரு நோக்கங்களும் நிறைவேறின. வான்படையைச் சேர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகனும் இப்பிரச்சினையில் கைது செய்யப்பட்டார். ரோஹண விஜயவீர ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான வாக்குகள் பிரிக்கப்பட்டதால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் நிலை ஏற்பட்டது என்பதும் உண்மை.

இவ்வாறு ஒரு பாட்டாளி வர்க்க அரசியலதிகாரத்தை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 1971 கிளர்ச்சியும், அதன் பின்னான ஜே.வி. பியின் அரசியல் நடவடிக்கைகளும் ஒட்டுமொத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. அதன் காரணமாக ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் மேலும் வலுப்படுத்தப்பட்டன. 1971 ஆம் ஆண்டுப் புரட்சியின் தோல்வியின் ஜே.வி.பியின் செயற்பாடுகள் முற்றாக முடங்கின. 1977இல் விடுதலை செய்யப்பட்ட விஜயவீர, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் அவரால் மீண்டும் நாடு பரந்த அளவில் இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதற்கான அத்திபாரத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது. அதன் பின்பு பகிரங்க அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்ட விஜயவீர இரகசியமாக இயக்கத்தைக் கட்டியமைக்க ஆரம்பித்தார். அவரும் தலைமறைவாகி மலையகத்தில் இருந்து புரட்சியை மீண்டும் உருவாக்குவதற்கான வேலைகளை ஆரம்பித்தார்.

1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அமைதிப் படை இங்கு இறங்கி நிலை கொண்டபோது, ஜே.வி.பி. இந்திய எதிர்ப்பு அலையை உருவாக்கியது. இலங்கை அரசு, இலங்கையின் சுயாதிபத்தியத்தை இந்தியாவுக்கு விற்றுவிட்டதாகக்கூறி, அரசுக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பித்தது. முதலில் இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிப்பதாகத் தொடங்கிய போராட்டம் 1988இல் ஆயுத வடிவெடுத்து இந்திய நிறுவனங்கள், இந்திய வர்த்தகர்கள் மீதான தாக்குதல்களாக மாறியது. இந்திய நிறுவனங்களில் பணியாற்றிய ஊழியர்கள்கூடக் கொல்லப்பட்டனர். தென்னிலங்கை யின் பல பகுதிகளிலும் குழப்பமான நிலை ஏற்பட்டபோது ஆயுதப் படைகள் களமிறக்கப்பட்டன. ஆயுதப் படைகளின் குடும்பங்களும் ஜே.வி.பியால் இலக்கு வைக்கப் பட்டன. எனவே ஜே.வி.பியினரைத் தேடியழிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. ரணசிங்க பிரேமதாசாவின் 'பச்சைப் புலிகளும்' களமிறக்கப்பட்டன. 1988, 1989 காலப் பகுதியில் ஜே.வி.பியினர் எனச் சந்தேகிக்கப்பட்ட 70ஆயிரத்து க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொடூரமான முறையில் கொல்லப் பட்டு வீதிகளிலும், ஆறுகளிலும் வீசப்பட்டனர். ரோஹண விஜயவீர வும் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு ரோஹண விஜயவீரவால் அரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை யின் பட்டாளி வர்க்க ஆயுதப் புரட்சி அவரின் இறப்புடன் மீளெழ முடியாதவாறு முடிவுக்கு வந்தது. ரோஹண விஜயவீர ஒரு பாட்டாளி வர்க்க அரசை உருவாக்க அர்ப்பணிப் புடன் பணியாற்றினாலும் அவரின் இனவாதப்போக்கு ஐ.தே.கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடை யேயான வித்தியாசத்தை இனங்கண்டு அதைச் சரியாகக் கையாளாமை ஆதரவு வழங்குவதுபோன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விரித்த வலையில் வீழ்ந்தமை, ஆயுதப் படைகள் பொலிஸ் பிரிவு போன்றவற்றுக்குள் அணிகளை உருவாக்கியதன் மூலம் புலனாய்வுப் பிரிவினர் இயக்கத்துக்குள் ஊடுருவ வழிவிட்டது போன்ற தவறுகளால் புரட்சி இரு தடவைகளும் பெரும் தோல்விகளை சந்திக்கும் நிலை ஏற்பட்டது. எப்படியிருப்பினும் ரோஹண விஜயவீர ஒரு புரட்சிகரத் தலைவன் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 22

– உமா சந்தோஷ்



வந்த களைப்பு இன்னமும் தீரவில்லை. உறங்கிக் கொண்டிருந்தார் நடா. அவர் மனைவி மட்டும் நேரத்தோடு எழுந்து ஆக வேண்டியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். சில நாட்களாக அவர் கொழும்பில் இல்லாத காரணத்தால் வீடு தலை கீழாக இருந்தது. இடை நடுவே யாழ்ப்பாணத்தில் இருந்து நடா குடும்பம் வந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டவர்கள் எல்லாரும் ரெலிபோன் மூலம் தொடர்பு கொண்டு கொண்டே இருந்தனர். எப்படியும் ஆட்கள் அன்று மாலை வரக்கூடும். நடாவைப் பார்க்க வென்று பல பேர் வரலாம். அவர்களுக்குக் கொடுக்க ஏதாவது எடுத்து வைக்கலாம் என்று தேடினால் ஒன்றும் கிடைக்கவில்லை. அவருக்குச் சட்டென ஒரு யோசனை தோன்றியது. நடாவை பார்க்க வருபவர்கள் நிச்சயம் வெறுங்கையோடு வரமாட்டார்கள். ஏதாவது கொண்டுதான் வருவார்கள். அதை வைத்துப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தார்.

மாலை வந்ததும் நடாவைப் பார்க்க ஒடிட்டர் மனைவிதான் முதலாவதாக வந்தவர். வந்தவர் வெறும் கையோடு வரவில்லை. கொள்ளுப்பிட்டியில் உள்ள 'ஸ்பொன்சில்' பற்றிஸ் வாங்கிக் கொண்டு வந்தார். அதுவே நல்ல ஆரம்பம். தொடர்ந்து வந்தவர்களும் வெறுங்கையோடு வரவில்லை. விலை கூடின கேக் வரை வந்தது. பெரும்பாலும் வந்தவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். மாடியிலுள்ள அறையில் உள்ள அலுமாரியில் உடுப்புகளை அடுக்கி வைத்துவிட்டு வந்த நடா மனைவி நடாவைத் தேடினார். காணவில்லை. குசினிக்குள் இருந்து சத்தம் கேட்டது. போய் பார்த்தால் வந்ததில் பெரிய கேக் ஒன்றை வைத்து வெளுத்துக்கட்டிக் கொண்டிருந்தார் நடா.

'ஐயோ! டையபற்றிஸ்க்குக் கூடாதெல்லே? நீங்கள் பாக்கிற வேலை என்ன அப்பா!" என்று கத்திக் கொண்டு வந்த மனைவியின் வாய்க்குள் கேக் துண்டொன்றை திணித்து அவரை அடக்கினார். அன்றிரவு இனிப்பு இனிப்பாகத் தின்று அலுத்தவராக நடா உறங்கிப் போனார். மறுநாள் நடா சற்று இளைத்தவராகக் காணப்பட்டார். கோயிலுக்குப் போற பிளான் அடுத்த வெள்ளி வரை பிற்போடப்பட்டது. அன்று மாலை நடாவைப் பார்க்க டொக்டர் பரா வந்திருந்தார். நடாவை நீண்ட நாட்களுக்குப் பின்னர் கண்டதும் அவர் சந்தோஷப்பட்டார். இருந்தும் அவருக்கு நடாவின் உடல் நிலையில் சந்தேகம் வந்தது. நடாவின் மனைவியை குளுக்கோ மீற்றரைக் கொண்டு வருமாறு கேட்டார். மீற்றர் றீடிங்கைப் பார்த்ததும் தலையில் கை வைத்தார் டொக்டர் பரா. நடாவின் மனைவியைத் தனியா அழைத்துக் கொண்டு வெளியே போனார். உடனடியாகக் குடுக்க வேண்டிய மருந்துகளை எழுதிக் கொடுத்தார். மருந்தோடு வந்தார் நடா மனைவி. டொக்டர் பரா நீண்ட நேரம் இருந்து சகல புத்திமதிகளையும் சொல்லிவிட்டுப் போய்விட்டார். டொக்டர் சொன்னதை மீண்டும் நடாவுக்கு ஒப்புவித்தார் நடா மனைவி. நடாவின் சுதந்திரம் பறிபோய்விட்டது. மீண்டும் கூட்டில் அடைக்கப்பட்ட அல்சேஷன் நாயைப்போல நடாவும் வீட்டில் அடைக்கப்பட்டார். நடாவின் ஆசைகள் அடக்கப்பட்டன. நடாவின் சுதந்திரம் பறிபோய்விட்ட நிலையில் மீண்டும் மனைவிக்கு அடிமையானார் அவர்.

டொக்டர் சொன்னபடி சாப்பாட்டில் கவனம் அதிகரித்தது. கண்டதும் சாப்பிட அனுமதி மறுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நடந்த அத்தனை விருந்துகளையும் மனதில் நினைவு கூர்ந்து நாக்கில் நீர் ஊற காலத்தைக் கழிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார் நடா. தனது மருதனார்மடத்து மச்சாளின் மீன் குழம்பும், பனங்கள்ளும் கனவில் வந்து போனது. டொக்டர் மச்சாள் வீட்டு வேலைக்காரி அவித்த பிட்டும் பொரியலும் நினைவில் வந்து நிம்மதியைக் கெடுத்தது.

அடுத்த நாள் காலை இனிப்பற்ற மல்லிக் கோப்பியோடு விடிந்தது. சிறிது நேரத்தில் உப்புச் சப்பற்ற 'ஓட்ஸ்' கஞ்சி அவரின் முன்னால் வைக்கப்பட்டது. சிறைக் கைதிக்கும் அதுபோலத்தான் உப்பில்லாக் கஞ்சி வைப்பார்களாம். தற்கொலை செய்யலாம் என்று கூட எண்ணத் தோன்றும் அளவிற்கு வாழ்க்கை வெறுத்தது. 'அதுக்காக" மனைவியை வளைக்கப்போய் மனைவியின் போலி அன்புக்கு அடிமையாகி நடந்து விட்ட விபரீதத்தை எண்ணித் தனக்குள் கவலைப்பட்டார் நடா.

தினமும் நடாவைப் பார்க்க வருபவர்கள் டையபற்றிஸ் பற்றி, விதம் விதமான கதைகளைச் சொல்லி நடா மனைவியைக் குழப்பத்தில் ஆழ்த்தினர். ஒவ்வெருவரும் வெவ்வேறு சாப்பாட்டு வகைகளையும், வெவ்வேறுவிதமான கைமருந்துகளையும் சொல்லிச் சென்றனர். நடாவுக்கு விசராக்கத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் கழிந்த மகிழ்ச்சியான நாட்களை எண்ணி எண்ணி வேதனைப்பட்டார் . யாழ்ப்பாணத்தை விட்டிட்டு வந்தது மடத்தனம் என்று அப்போததான் மனதுக்குப்பட்டது.

நோய்க்கான காரணம் சூழலும், சந்தோஷமும் குறைவதே என்று தெளிவாகத் தெரிந்து கொண்டார். யாழ்ப்பாணத்தில் தான் இருந்த காலத்தில் நோய் அற்று இருந்ததற்கு முக்கிய காரணம் அங்கிருந்த சூழலும் சந்தோஷமான மக்களும் மட்டுமே என்று தெளிவு பிறந்தது. அன்று வெள்ளிக்கிழமை. கோயிலுக்குப் போய்விட்டு ஒடிட்டர் மனைவி நடாவைப் பார்க்க வந்தாள். வரும்போது கையில் அர்ச்சனை சாமான்களோடு வந்தார். மீண்டும் நடக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைச் சொன்னாள். அதற்குரிய காரணங்கள் பலதையும் வடிவாக எடுத்துச் சொன்னாள். நடாவின் மனைவி அதிகம் ஒடிட்டர் மனைவியை நம்புவாள். எனவே அவள் சொல்வதையே கடைப்பிடிக்கவும் பார்ப்பாள்.

இரவு நடாவின் ஸ்போட்ஸ் கிளப் நண்பரான கமகே தனது குடும்பத்துடன் வந்துபோனார். அவரும் சிங்கள 'வெத மாத்தையா' வாக இருக்கின்ற ஹாமதுறு ஒருவர் பற்றிச் சொல்லி நீண்ட காலம் 'மெற்போமின்' போட்டுக் கொண்டு வந்த தன்னை அவர் அதினின்றும் மீட்டதாகவும் இப்போது, தான் அவர் தரும் இலைப்பொடி ஒன்றைத் தினமும் பாவிப்பதாகவும், ஒரு மூலிகை மரத்தில் செய்த குவளை ஒன்றில் நீர் பருகுவதாகவும் சொன்ன போது, அங்கு தான் போக வேண்டும் என்று அவரிடம் ஹாமதுறுவின் தொடர்பை வாங்கி வைத்துக் கொண்டார் நடா. ஆனால் நடா என்ன நினைத்தாலும் நடக்காத நிலையே காணப்பட்டது. ஏதாவது நடக்க வேண்டுமாயின் நடா மனைவி முதலில் மனப்பட வேண்டும். அதுவும் ஒடிட்டர் மனைவியின் ஆலோசனையைக் கேட்க வேண்டும். இப்படிப் பல தடக்குகள் இருந்தன.

ஒடிட்டர் மனைவி ஆலோசனைப்படி நடா நடக்கத் தொடங்குவதற்குரிய எல்லா வேலைகளும் நடைபெற்றன. சப்பாத்து, உடு புடவைகளெல்லாம் வெளியே எடுத்து வைத்தாள் நடா மனைவி. மறுநாள் காலை நடக்கத் தொடங்குவதாகத் திட்டம். முன்புபோல ஒரு கூடைக்குள் சுடுநீர் போத்தல், துவாய், ரிசூப்பெட்டி என்று ஏகப்பட்ட சாமான்கள் எடுத்து வைக்கப்பட்டன.

(தொடரும்)

## காந்தள் மலர்கள் கண்சிமிட்டும் நேரம்

இது கார்த்திகை மாதம்
தாய் நிலத்தில் மழைநீர் சொரிய
விழிகளில் கண்ணீர் முட்ட
தேசமெங்கும் பூக்கள் முகிழும்

பூக்கள் ஒவ்வொன்றிலும்
வதனங்கள் மிளிர
தாய்நிலம் உவகை கொண்டு
எழுச்சி கொள்ளும்

காற்று பலமாய் வீச
வீசுகின்ற காற்றில்
உயிர் மூச்சுகள் உலாவ
தேசம் சிலிர்த்திடும்

பூக்கள் தேச வெளி எங்கும்
பூத்துச் சிரிக்க
மனவெளி எங்கும் சத்தியக்
கொள்கைகள் பிறக்கும்...

ஆ. முல்லைதிவ்யன்

## இங்கு ஏதுவும் தீர்க்கமாய் நிறைவேற்றப்படவில்லை...

துயரமொன்றை பாடுவதற்குமுன்
முற்றுப்புள்ளியொன்றை
இட்டுவிடுகிறது போர்க்கால
மொன்றை கடந்துவந்திருக்கிற பேனா
ஏற்கனவே மை தீர்ந்து போன
பேனாவின் முறிந்த கால்களின் வழியே
யாரோ குருதியை நிரப்பி
அனுப்பியிருக்கிறார்கள்

குருதி நிரப்பியவன் பெயர் தவிர
பேனா அனைத்தையும்
எழுதிவிடுகிறது
குண்டுகளின் பெயர்கள்...
மலம் கழித்த கடற்கரை...
ஊர்கள்...
முண்டங்களின் பெயர்கள்...
உணவுக் கோப்பையில்
விஷமூற்றியவர்கள் பெயர்கள்...

கிழிக்கப்பட்ட யோனிகள்...
நிர்வாணம்...
இப்படி எல்லாவற்றையும்
எழுதிவிடுகிற பேனா
அருவருக்கத்தக்க அவர்களின்
பெயர்களை எழுதிவிட்டு
அதன்மேல் சிறுநீர் கழித்ததன் வேகம்
யுகம் கடந்ததோர் உயிரின் குரோதத்தை
வரைந்ததைப்போலான தீவிரம்

பாதி எரிந்த பேனா
எழுத்தில்கூட அக்காலத்தின்
பிணநெடிலை
தொடர விரும்புவதில்லை
இன்னும் பாதி மீதமுள்ள பேனாவில்
குருதியை ஊற்ற அவர்கள்
காத்துக்கொண்டுதானிருக்கிறார்கள்
பலருக்கு இன்னும் புரியவில்லை
இங்கு ஏதுவும் தீர்கமாய்
நிறைவேற்றப்படவில்லை....

–அனாதியன்
–மல்லாவி

## உன் நினைவுகள்...

உன்னையே நினைத்தேன்
என்னை ஏன் மறந்தாய்...
இரவினில் விழித்தேன் – என்
இதயமதை இழந்தேன்...
உன் பிரிவுகள் யுகமாகய் தோன்ற

என் இரவுகள் விடியாமல் போக...
பேசிவிட ஆயிரம் வார்த்தைகள்
அதை உரைத்திட தடுமாற்றங்கள்
என் உயிரது என்னுடன் உள்ளவரை...
உன் நினைப்பென்பது
என் மரணம் வரை...

பி.சுபாஸ்



02

# நீந்திக் கடந்த நெருப்பாறு

- நா. யோகேந்திரநாதன் -

அவர் தன் மகனைப் பற்றிய தவிப்புடன் மடு நோக்கிப் போய்க்கொண்டிருக்க, அவனோ களமுனையில் பெரும் குழப்பமான மனதுடன் கொதித்துக் கொண்டிருந்தான். கட்டளைத் தளபதியின் மேல் கோபம் கோபமாகச் சங்கரசிவத்துக்கு வந்த போதும் எதுவும் செய்ய முடியாத நிலையில் சங்கரசிவம் தவித்தான். ஒரு பெரும் வெற்றியை வேண்டுமென்றே விட்டுக் கொடுத்து தோல்வியைத் தாங்கள் விலையாகப் பெற்று விட்டதாகவே அவன் கருதினான். ஏன் தளபதி அப்படி பின் வாங்கும்படி கட்டளையிட்டார் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னிரவு இரண்டு மணியளவில் எறிகணை வீச்சு ஆரம்பமான போது உடனடியாகவே காவலரண்களை விட்டுப் பின் வாங்கும்படி தளபதியிடமிருந்து கட்டளை வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஷெல் விழும் எல்லை முன்னேறி காவலரண்களை நெருங்கும் முன்பே போராளிகள் ஏறக்குறைய நூறு மீற்றர்கள் பின்வாங்கிவிட்டனர்.

சங்கரன் அது ஒரு தந்திரோபாய பின்னகர்வு என்றே கருதினான். மேலும் இன்னொரு கட்டம் பின்வாங்கும்படி மேலிடத்திலிருந்து கட்டளை வந்த போது அவனால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் களமுனையில் கட்டளைகளைக் கேள்விக்கிடமின்றி நிறைவேற்றுவது கட்டாயமானது என்ற வகையில் அவன் அப்படியே செயற்பட்டான். நான்கு மணியளவில் எறிகணை வீச்சு முற்றாக ஓய்ந்த பின்பும் மேலிடத்தில் இருந்து எந்தக் கட்டளைகளும் வரவில்லை. சக போராளிகள் "என்னண்ண செய்யிறது?" என மாறி மாறிக் கேள்வி எழுப்பிய போது அவனால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. நன்றாக விடிந்த பின்பு பற்றைகளின் இடைவெளிகளால் மறைந்து நின்று பார்த்த போது போராளிகளின் காவலரண்களெங்கும் படையினரின் நடமாட்டம் தென்பட்டது. வோக்கியை செயல்படுத்தி அந்த விடயத்தை தளபதிக்கு தெரியப்படுத்தினான். "தெரியும்! நீ, நான் சொல்லுறத மட்டும் செய்தால் போதும்", என்ற கடுமையான கட்டளை பதிலாக வந்தது.

பண்டிவிரிச்சானுக்குச் சென்ற பரமசிவத்தால் எதையுமே திடமாக அறிய முடியவில்லை. போராளிகளிடம் விசாரித்தபோது எவரும் காயப்பட்டோ, வீரச்சாவடைந்தோ வரவில்லை எனவும் முள்ளிக்குளத்துக்குள் இராணுவம் இறங்கிவிட்டது என்பதையும் மட்டும் அறிய முடிந்தது. அப்படியானால் சண்டை எதுவும் நடைபெறாமலே இராணுவம் முன்னேறியிருக்க வேண்டும் என்றே கருதவேண்டியிருந்தது. ஆனால் இரவு, பகலாக மழை, வெயில், பனி என்பவற்றைப் பொருட்படுத்தாமல் எல்லை காக்கும் போராளிகள் எந்தவித எதிர்ப்புமின்றிப் படையினரை முன்னேற விட்டிருப்பார்கள் என்பதை அவரால் நம்பமுடியவில்லை. பல்லாயிரம் சில் வண்டுகள் ஒன்றாக ஒலித்துவிட்டு திடீரென நிறுத்தும் போது ஏற்படும் ஒரு விதமான இனம்புரியாத பயம் போன்ற ஒரு உணர்வே அவரை ஆட்கொண்டிருந்தது.

பலவிதமான கேள்விகளால் குழம்பிப் போயிருந்த மனதுடன் அவர் தனது சைக்கிளை மீண்டும் மடுவை நோக்கி மிதித்தார். முள்ளிக்குளம் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து மடுவிலும் தட்சணாமருத மடுவிலும் தங்கியிருந்தனர். முள்ளிக்குளம், குஞ்சுக்குளம் பிரதேசங்கள் அடிக்கடி சண்டைகள் நடக்கும் இடங்களாகவே விளங்கின. அவர் மடுவைத் தாண்டி தட்சணாமருதமடுவை நோக்கி வந்த போது முள்ளிக்குளம் முருகப்பரைக் கண்டதும் சைக்கிளை நிறுத்தினார்.


முருகப்பருக்குத் தெரியாத காட்டுப் பாதைகளே கிடையாது. காடுகளில் கேட்கும் சிறு அசைவுகளின் ஒலியையும் அவர் காதுகள் துல்லியமாகக் கிரகித்து அது எப்படிப்பட்டது எனக் கண்டுபிடித்துவிடும். அது போன்றே அவரின் நுகர்வு சக்தியும் அற்புதமானது. வாசனையை கிரகித்தே சுற்று வட்டாரத்தில் என்ன மிருகங்கள் என்று கண்டுபிடித்துவிடுவார். அவர் கையில் வேட்டைக்கட்டு கட்டப்பட்ட உடும்புகள் இரண்டைக் கொண்டு வந்த போதே காட்டுக்கு வேட்டைக்குப் போயிருக்கிறார் என்பதை பரமசிவம் புரிந்து கொண்டார்.


நன்றாக விடிந்த பின்பு பற்றைகளின் இடைவெளிகளால் மறைந்து நின்று பார்த்த போது போராளிகளின் காவலரண்களெங்கும் படையினரின் நடமாட்டம் தென்பட்டது. வோக்கியை செயல்படுத்தி அந்த விடயத்தை தளபதிக்கு தெரியப்படுத்தினான். "தெரியும்! நீ. நான் சொல்லுறத மட்டும் செய்தால் போதும்", என்ற கடுமையான கட்டளை பதிலாக வந்தது.

சைக்கிளை நிறுத்திய பரமசிவம் "என்ன.. ராத்திரி காட்டுக்க இறங்கியிருக்கிறாய் போல கிடக்குது!" என முருகப்பரைப் பார்த்துக் கேட்டார். "ஓ... ஒண்டும் அணையேல்ல.. ஒரே செல்லடி... அதில காட்டுக்கை கனதூரம் உள்ள இறங்கவும் முடியேல்ல. திரும்பி வரேக்கை தான் நாயள் ரண்டு உடும்புகளைக் கௌவிச்சுதுகள்" உடும்புகளை நன்றாகப் பார்த்துவிட்டு பரமசிவம் "ஒண்டைத்தாவன்", எனக் கேட்டார். முருகப்பர் பெரிதாக இருந்த உடும்பைத் தூக்கி பரமசிவத்திடம் கொடுத்தார். விலை பேசுவது உடனே காசை எதிர்பார்ப்பது போன்ற பழக்கமெல்லாம் அவர்களிடம் இல்லை. மாலையோ அல்லது அடுத்த நாளோ முருகப்பரைச் சந்திக்கும் போது ஏதோ தான் விரும்பும் பணத்தைக் கொடுப்பார் பரமசிவம். முருக்கப்பரும் விரித்துப் பார்க்காமலேயே வாங்கி இடுப்பில் சொருகிக் கொள்வார். "முள்ளிக் குளம் பக்கம் ஏதும் விசேசமே?" "ஒண்டுமாய் விளங்கேல்ல.. விடியப் புறமாய் நாலைஞ்சு பெரிய வாகனங்களில பொடியள் முள்ளிக்குளம் பக்கமாய்ப் போனாங்கள்... ராத்திரியும் ஒரே செல்லடி" என்றார் முருகப்பர். முள்ளிக்குளம் நோக்கிப் போராளிகள் போகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்ட போது அவருக்கு சில விசயங்கள் புரிவதுபோல் தோன்றியது. இப்போது நிலவுவது புயலுக்கு முன்பான அமைதியாகத்தான் இருப்பதாகவே அவருக்குத் தோன்றியது. உடும்பை வாங்கி சைக்கிள் ஹான்டிலில் கொழுவிக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார். தோட்டத்தில் மிளகாய்க் கண்டுகளுக்கு தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த பரமசிவத்தின் இளைய மகனுக்குப் பசி எடுக்க ஆரம்பித்துவிட்டது. பத்துப் பதினைந்து வருடம் பழமை வாய்ந்த "வூல்சிலி" நீரிறைக்கும் இயந்திரம் ஒரு சீரான ஒலியுடன் மோட்டையிலிருந்த நீரை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. தண்ணீர் மாறுவதில் ஒரு சிறிய தாமதம் ஏற்பட்டாலும் நீர் வாய்க்கால்களே உடைத்துப் பாயத் தொடங்கிவிடும். வழமையாக ஏழரை எட்டு மணிக்கெல்லாம் வந்து தன்னிடம் மண்வெட்டியை வாங்கிக் கொண்டு தன்னைச் சாப்பிட விடும் பரமசிவம் ஒன்பது மணியாகியும் வராதது அவனுக்கு கோபத்தை மூட்டியது. இறைப்பை நிறுத்துவது என முடிவு செய்தான். ஆனால்தண்ணீர் மாறுவதை விட்டு விட்டு இயந்திரத்தை நிறுத்தப் போனால் நீர் மேவிப்பாய்ந்து வாய்க்கால்கள், பாத்திகள் எல்லாவற்றையும் உடைத்துவிடும்.

தனது தாயுடன் மிளகாய்ப் பழம் பிடுங்கிக் கொண்டிருந்த முத்தம்மாளைக் கூப்பிட்டான் அவன். அவள் அருகில் வந்ததும், "இந்தத் தண்ணிய கொஞ்ச நேரம் மாறு, நான் போய் மிஷின் நிப்பாட்டிப்போட்டு வாறன்", என்றான் சுந்தரசிவம். அவள் எதுவும் பேசாமல் மண்வெட்டியை வாங்கிக் கொண்டாள். முத்தம்மாளின் தகப்பனான பெருமாளும், தாய் வேலம்மாவும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள், 1983 இன வன்முறைகளை அடுத்து முதலில் வவுனியாவிலும் பின் பூவசரன்குளத்திலும் குடியிருந்தனர். பின்பு இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து மடுவுக்கு வந்தனர். இப்போ தட்சிணாமருத மடுவில் நிரந்தரமாகக் குடியிருந்தனர். கூலி வேலை செய்தே அவர்கள் சீவியம் போனது. பெருமாள் ஒரு நல்ல தொழிலாளியாக இருந்த போதும் கசிப்பு அவனை நிரந்தர நாயாளியாக்கி விட்டது. தகப்பனையும், நாலு பிள்ளைகளையும் வேலாயியும் மூத்த மகள் முத்தம்மாவுமே உழைத்துப் பார்க்க வேண்டியிருந்தது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)





# குறும்படங்கள் ஒரு பார்வை

- கி.ரி. கேதாரநாதன் -

உலக குறும்பட வரிசையில்..,

## BEFORE DAWN ( விடியலுக்கு முன்பு)

இது ஒரு ஹங்கேரிய குறும்படம். அகதிகள் பற்றியதாக, அரசியல் பின் புலத்துடன் கூடிய கூர்மையான குறும்படமாகும். 2005 ஆம் ஆண்டில் கலின்ற் கெனியிறாஸ் என்பவர் இப்படத்தை நெறியாள்கை செய்திருந்தார். "கான்ஸ்" திரைப்பட விழாவில் முதல்தரமான உயர்தர விருதொன்றிற்குப் பரிந்துரைக்கப்பட்டது. வீரியமான அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டதாக விமர்சகர்களால் சர்வதேச அளவில் பாராட்டப்பட்டது.

இக்குறும்படத்தில் உரையாடல்கள் முற்றாகத் தவிர்க்கப்பட்டன. இயற்கையான ஒலிகளும் வாகன ஒலியெழுப்பியும் - உறுமல் சத்தமுமே ஒரே ஒலிக் குறிப்புகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெளிப்படையாக கதாநாயகர்களோ, பிரதானமானவர்களோ எவரும் இல்லை. எல்லோரும் நெருக்கடிக் குட்பட்டுத் தப்பியோடும் சாமான்ய மானவர்கள். ஆளரவமற்ற காற்றில் அசைந்தாடும் புதருக்குள் இருந்து வாகன சமிக்ஞை ஒலி கேட்டு மக்கள் திரள் வெளிக்கிளம்பும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் ஒரு அபூர்வமானதொரு அனுபவமாகும். எல்லோரும் அந்தப் புதருக்கள் இருந்து அகற்றப்பட்டதும் இறுதிக் காட்சியில் அதனுள் மறைந்திருந்து ஆழ்ந்த துயரில் வெளிப்படும் மனிதமுகம் எம்மை உறைய வைக்கின்றது. காட்சிகள், படிமங்களுடன் கூடிய முதிர்ச்சியானதொரு அரசியல் திரைப்படம் இதுவாகும். அண்மைக்காலமாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் நீண்டகால யுத்த நெருக்கடிக்குள்ளும் அல்லற்பட்ட எம்மக்களுக்கு இத்தகையதொரு அனுபவம் புதிதானால்ல. பலவற்றை பூடகமாக இக்குறும்படம் உணர்த்துகிறது.

## The Lunch Date

எந்தப் படைப்பாக இருந்தாலும் முழு அளவில் அப்பழுக்கற்ற விதத்தில் செய் நேர்த்தியை எட்டிவிடுதல் என்பது சாத்தியமில்லை என்று கூறுவார்கள். பெரும்பாலும் இது உண்மையாகும். இதனை மறுதலிக்கும் வகையில் அரிதாகச் சிலர் படைப்பு முயற்சியில் சிகரத்தை எட்டியிருக்கிறார்கள். குறும்படத்தைப் பொறுத்தவரையில் முன்னுதாரணமிக்க ஆதர்ச படைப்பாக உலகளாவிய ரீதியில் இன்றும் கொண்டாடப்படும் தனித்துவமான படைப்பு The Lunch Date ஆகும். இகு குறும்படத்தைக் கொலம்பியா பல்கலைக்கழக மாணவர் ஒருவர்தான் எழுதி நெறியாளுகை செய்தார் என்பது எவருக்கும் ஆச்சரியர்த்தை ஏற்படுத்தும். ஆமாம். அத்தகையான பிரமிப்புக்கு உரியவர் பட்டதாரி மாணவ நிலையிலிருந்த அடம் டேவிட்சன். "கான்ஸ்" சர்வதேச திரைப்பட விழாவில் 1990 ஆம் ஆண்டு சிறந்த குறும்படத்திற்கான அதியுயர் விருதையும் மற்றும் ஒஸ்கார் விருதையும் இக்குறும்படம் ஈட்டியதென்பது குறும்பட வரலாற்றில் அதன் வளர்ச்சியில் ஈடிணையற்றதொரு சாதனையென்பது குறிப்பிடத் தக்கது. கறுப்பு வெள்ளையில் பத்து நிமிடங்கள் மாத்திரமே கொண்டது இக்குறும்படம்.

கிராண்ட் சென்றல் ரெயில்வே ஸ்ரேசனிலுள்ள ஹோட்டலொன்றில் வெள்ளைக்காரச் சீமாட்டி ஒருவருக்கும் கறுப்பரான் சாதாரண மனிதர் ஒருவருக்கும் நிகழும் அபூர்வமான அதேவேளை வெள்ளைக்காரப் பெண்ணின் பார்வையில் அசௌகரியமான சந்திப்பொன்றே இக்குறும்படத்தின் மையக்கருவாகும். ஹோட்டல் உணவைப் பெற்றுக் கொண்ட வெள்ளைக்காரப் பெண் சௌகரியமாக இருந்து சாப்பிடுவதற்காகக் காலியான ஹோட்டல் இருக்கையொன்றிற்கு எடுத்துச் செல்கிறாள். அப்போது உண்வைக் குத்திச் சாப்பிடுவதற்கான முள்ளுக் கரண்டி போன்றவற்றைத் தயாராக எடுத்துச் சொல்ல மறந்து விடுகிறார். எனவே, உணவைஇருக்கை அருகிலுள்ள மேசை ஒன்றில் மேல் வைத்துவிட்டு முள்ளுக்கரண்டியை எடுத்து வரச் செல்கிறார்.

திரும்பி வந்து பார்க்கும்போது அவர் வைத்துவிட்டுச் சென்ற உணவை கொளுத்தவானான கறுப்பனொருவன் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறார். ஆரம்பத்தில் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஒருவாறு சுதாகரித்துக் கொண்ட பெண் எதிர்ப்புணர்வை வரவழைத்துக் கொண்டு அதே தட்டிலிருந்து தம் பங்கிற்குச் சாப்பிடுகிறார். இருவரும் சாப்பிட் முடிந்த பிறகு கறுப்பரான மனிதன் எழுந்து சென்று மீண்டும் அதே இடத்திற்கு இருவருக்குமான தேநீர் கோப்பைகளுடன் வருகிறார். அப்பெண் இரு மிடறுகள் தேநீரைக் குடித்துவிட்டு வெளியேறுகிறார். முற்றாக வெளியேற முன்னர் சற்றுத் திரும்பிப் பார்க்கிறார். அப்போது அவர் விட்டுச் சென்ற அதே உணவு இன்னொரு மேசையின் மேல் வைத்தவாறு அப்படியே இருக்கிறது.

வித்தியாச பார்வைக் கோணத்தில் எம்மைப் புரட்டி விடுகிறது இக்குறும்படம். மிகக் குறைந்த உரையாடல்களுடன் அதுவும் குறிப்பாக, பிரதான பாத்திரங்க ளுக்கிடையே முற்றாகவே உரையாடல்கள் இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட செலவீனங்களுடன் எத்தகைய ஆர்ப்பாட்டமோ, பிரமாண்டமோ இன்றி அருமையான வித்தியாசமான அனுபவத்தைப் பத்து நிமிடங்களு க்குள் கலை நேர்த்தி குன்றாது சாத்தியமாக்கி யிருப்பது குறித்து விமர்சகர்கள் ஏகோபித்த முறையில் பாராட்டி உள்ளனர்.

## A Cu;AIRY TALE

இக்குறும்படம் மிக ஆரம்ப காலத்தில் 1957 ஆம் ஆண்டு வெளியானது. இதன் வித்தியாசமான வகைமையினாலும், கையாளப் பட்டிருக்கும் எளிமையான உத்தியினாலும் தனித்துவமானதாகக் கருதப்படுகிறது. இதில் பிரதான பாத்திரங்கள் இரண்டே இரண்டு. அதுவும் கதிரையும், மனிதனும் . இரண்டிற்கும் இருக்கக் கூடிய பொதுப்புத்தியில் உறைந்து போயிருக்கும் பாரம்பரிய உறவை வித்தியாசமான படைப்புக் கோணத்திலிருந்து இது நோக்ககின்றது.

நோமன் மைக்லாரான் என்ற கனடியரால் நெறியாளுகை செய்யப்பட்டது. வளர்ந்த பெரியவர்களிடமிருந்து கூட குழந்தைத் தனமான குதூகலிப்பை அவர் கொண்டு வருகிறார்.

இக்குறும்படத்தில் இசை மிகவும் விசேடமான தனித்துவமான பங்கை ஏற்றுள்ளது. ஒரு விதத்தில் இசையே குறும்படத்தை நகர்த்துகிறது என்று கூடக் கூறலாம். இதற்கான மூவரின் இசையாக ரவி சங்கர் உட்பட சற்றூர்லால் மற்றும் மோரிஸ் பிளாக்பேர்ண் ஆகியோரது இசை மிக அருமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பரஸ்பரம் காட்சிக்கு இசையும், இசைக்குக் காட்சி நல்கும் பங்களிப்பினால் அர்த்தச் செறிவுடன் கூடிய புதியதொரு அனுபவம் கிட்டுகிறது. சினிமா மொழியில் கலை நேர்த்தி குன்றாமல் இது வெளிக்கொணரப்படுகிறது.

பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்த குளோட் யுற்றாவின் உடல் தொழி மிகவும் அற்புதமானது. கதிரைக்கும் மனிதனுக்குமிடையே தோன்றும் ஒவ்வாமை. முரண்களையும் சமத்துவமற்ற தன்மைகளையும் சிக்கல்களையும் மற்றும் புரிதலுடன் கூடிய இணக்க நிலைகளையும் மிகத் துல்லியமாக காட்சி ரூபத்திலும் கதையாக நகர வைக்கிறது இக்குறும் படம். சமூக அடுக்கில் நிலவும் சமத்துவமற்ற போக்குகளை சர்ரியலிசப் பாணியில் இக்குறம்படம் விமர்சிக்கிறதெனலாம்.


தேறிய ஈழத்துக் குறும்படங்கள் நான்கு.

### கரும்பலகை

விறகு வெட்டிச் துவிச்சக்கர வண்டியில் கொண்டு சென்று விற்கும் வாய் பேசாத, காது கேளாத வயோதிபத் தந்தையுடன் பழைய வீடொன்றில் வேலையற்றிருக்கும் பட்டதாரி இளைஞன் வசிக்கிறான். தந்தைக்கும் மகனுக்குமிடையிலான உரையாடல்,தொடர்பாடல் வீட்டிலுள்ள கரும்பலகை மூலம் நிகழ்கிறது. நேர்முகப் பரீட்சைக்குச் சென்று வரும் அப்பட்டதாரி இளைஞனுக்கு வேலை கிடைத்தபாடில்லை. ஏமாற்றத்துடன் நாட்கள் கழிகின்றன.

தந்தை கொடுக்கும் பணத்தில் தந்தைக்குத் தெரியாமல் சிறு தொகையை சேமித்து வைக்கிறான். தந்தையும் அவ்வாறே சில்லறைகளைச் சேமித்து வருகிறார். கிழிந்த நிலையில் மகளது சப்பாத்து இருப்பதைக் கண்ட தந்தை தன் சேமிப்பாக வைத்திருந்த சில்லறைகளை தாள்களாக மாற்றிச் சப்பாத்தொன்றை வாங்குமாறு மகனுக்குக் கரும்பலகையில் குறிப்பு எழுதுகிறார். இதற்கான பணத்தையும் நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு செல்லும் "பைல்" ஒன்றுக்குள் வைத்துவிடுகிறார்..

நேர்முகப் பரீட்சை நடத்தும் அதிகாரியின் கண்களில் தென்படும் அப்பணத்தை அதிகாரி உள்ள 10ரச் சிரித்தபடி இலாவகமாக எடுத்துக் கொண்டு மறுநாள் வேலைக்கு வருமாறு கூறுகிறார். வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்ளவதற்குப் பட்டப் படிப்புக்கு அப்பால் பல தகுதிகள் வேண்டும் என்பதைக் காட்சிப்படுத்தமுற்படும் நெறியாளர் அதன் பின்னணியில் நிகழுபவற்றைக் கூட அறிய முடியாத அப்பாவித்தனமுடையோரை மாறுபட்ட வகையில் இக் குறும்படத்தில் வெளிப்படுத்துகிறார். அவர் உருவாகித்தவாறு சில காட்சிகள் போதிய அழுத்தத்துடன் முழுமையாக வரவில்லையெனினும், குறும்படத்தின் போக்குக்கு ஊறு செய்யவில்லை.




# கிரிக்கெட் ஓ... கிரிக்கெட்...

- காவலூர் ஞானம் -

வீட்டுச் சாப்பாட்டை விட, ஹம்பேர்கர், பிட்ஸா போன்ற வேக உணவுகளுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது போல, இன்றைய நாட்களில் பாரம்பரியமாகத் தொடரும் டெஸ்ட் போட்டிகளை ஓரங்கட்டிவிட்டு, ஒருநாள் போட்டிகளில் மோகம் அதிகரித்துள்ளது. எதிலும் வேகம் எங்கும் வேகம் என்ற நிலை இன்று மேலோங்கி இருப்பதால், இருபதுக்கு இருபது, ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளே பலரின் அபிமானத்துக்கு உரியவையாக மாறிவருகின்றன. அந்தந்த நாட்களில், முடிவுகள் தெரிய வருவதுதான் பிரதான காரணம். அதிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் என்பதால், குறித்த இலக்கை அடைய, துடுப்பாட்ட வீரர்களின் துணிச்சலான விளாசல்கள் தேவைப்படுவதும், இப்படி அடிக்க விடாமல் சாதுர்யமாகப் பந்துகளை வீச வேண்டியதும், இந்த ஒருநாள் விளையாட்டில் அவசியமாகின்றது. பார்ப்பவர்களுக்கும் பரவசம் ஏற்படுத்தும் இந்த விளையாட்டுகளில், விறுவிறுப்புக்கு பஞ்சம் இருப்பதில்லை. எனவே அணிகளைத் தெரிவு செய்யும் போதும், ஒருநாள் ஆட்டத்துக்குரிய அணியில், விளாசல் மனனர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள்.

ஐந்து நாள் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுபவர்கள் நிதானமாக விளையாட வேண்டும். அதிலும் ஆரம்பத் துடுபாட்டக் காரர்கள் என்றுவருபவர்களிடம். தனித்துவமான ஒருதிறமையை எதிர்பார்க்கிறார்கள். முழுமூச்சோடு பந்துகளை வீசும் அதிவேக பந்துவீச்சாளர்களை இவர்கள்தான் எதிர்கொள்ள வேண்டும். அணியின் தடுப்புவேலிகள் போல செயற்படுபவர்கள் இவர்கள். இவர்கள் வேகமாக தங்கள் விக்கெட்டுகளை இழந்தால், அணித டுமாறும் நிலைவரலாம்.

## கிரிக்கெட்டில் ஓவர்கள்

'ஓவர்'என்றபதம், கிரிக்கெட்டில் எத்தனை பந்துகளை ஒருவர் வீசமுடியும் என்பதைக் குறிக்கும் சொல்லாகும். 1899வரை, 4 பந்துகளை வீசினால் ஒரு ஓவர் முடிகின்றது என்று இருந்த விதிமுறை,பின்பு ஐந்தாக மாற்றப்பட்டது. 1900இல் ஒரு ஓவரில் வீசப்படக்கூடிய பந்துகள் ஆறாக மாற்றப்பட்டது. இன்றுவரை இந்த விதிமுறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் 1922 இல் அவுஸ்திரேலிய ஓவரில் எட்டுப் பந்துகள் வீசப்பட்டுள்ளன. இதன் அண்டை நாடான நியூசிலாந்துக்கும் இந்த எட்டுப் பந்துகள் கொண்ட ஓவர் முறை பரவியது. அடுத்து தென்னாபிரிக்காவும் இந்த முறையைப் பின்பற்ற ஆரம்பித்தது. ஒரு சோதனைக்காக இங்கிலாந்திலும் எட்டுப் பந்துகள் கொண்ட ஓவர்முறை, 1939இல் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

முதல் ரக கிரிக்கெட் விளையாட்டுக்கள், இரண்டாம் உலக மகாயுத்த காலமான 1940இல் நிறுத்தி வைக்கப்பட்டன. இதன் பின்னர் இங்கிலாநதில் கிரிக்கெட் விளையாட்டு ஆரம்பமான போது, ஆறு பந்துகள் கொண்ட ஓவர்களே வீசப்பட்டன. 1947 இல் ஆட்டத்துக்கு ஏற்றவாறு, ஆறு அல்லது எட்டு பந்துகள் கொண்ட ஓவர்கள் வீசப்படலாமென்று சட்டம் வரையறுக்கப்பட்டது. 1979-80 அவுஸ்திரேலிய நியூசிலாந்து சீசன்கள் முடிவடைந்ததும் ஆறு பந்துஓவர்கள் என்ற முறையே உலக நாடுகள் எங்கும் நடைமுறைக்கு வந்தன. 2000மாவது ஆண்டிலிருந்து. இது ஒருகிரிக்கெட் விதிமுறையாக்கப்பட்டு விட்டது. இது ஓவர்களின் கதை!.

## கிரிக்கெட் மேய்ப்பர்கள்

கிரிக்கெட் விளையாட்டுக்களின் மேய்ப்பர் என்று சொல்லப்படும் 'ஐ.சி.சி. 'என்றஅமைப்பு, 1909இல் இம்பீரியல் கிரிக்கெட் கொன்பெரென்ஸ் என்றே இருந்துள்ளது. பின்பு 1965இல் பன்னாட்டு கிரிக்கெட் கொன்பெரன்ஸ் என்று மாற்றம் பெற்றது. இதுவே பன்னாட்டு கிரிக்கட் கவுன்சிலாக (ஐ.சி.சி.)1989 தொடக்கம் உருவெடுத்துள்ளது. 1909இல் இதன் ஆரம்பஅங்கத்துவ நாடுகளாக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளே இருந்துள்ளன. இப்பொழுதுஅதன் முழு அங்கத்தவர்களாக,டெஸ்ட் போட்டிகள் விளையாடும் 12 நாடுகள் இருக்கின்றன. போட்டிகளுக்கான நடுவர்களை நியமிப்பது, விதிமுறைகளை வகுப்பது,போட்டிகளின் திகதிகளை ஒழுங்குபடுத்துவது, பன்னாட்டு கிரிக்கெட் விளையாட்டுக்களை நிர்வகிப்பதே இந்தஅமைப்பின் பணியாகும். 104 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தஅமைப்பின் தலைமையகம் துபாயில் இருக்கின்றது. இந்தஅமைப்பின் தலைவராக முன்னாள் கிரிக்கெட் வீரரான ஷகீர்அபாஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

முதல் மூன்றுநாடுகளாக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இந்தஅமைப்பில் அங்கத்தவர்களாகினார்கள் என்று ஆரம்பத்தில் கூறினோம் அல்லவா? இவர்களைத் தொடர்ந்து 1926இல் இந்தியா, மேற்கிந்தியதீவுகள், நியூசிலாந்து ஆகிய நாடுகள் இந்த அமைப்பின் முழு அங்கத்துவ நாடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1952இல் பாகிஸ்தான் ஏழாவது முழு அங்கத்துவ நாடாக இணைக்கப்பட்டது. 1961இல் தென் ஆபிரிக்கா காமென்வெல்த் அமைப்பை விட்டுவிலகியது காரணமாக, தன் அங்கத்துவத்தை இழந்தது. 1981இல் முழு அங்கத்துவராக இணைந்ததுதான் இலங்கை. இதன் விளைவாக மீண்டும் அங்கத்துவநாடுகளின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்தது.

1989இல் இந்தஅமைப்பு முன்பேகுறிப்பிட்டதுபோல, பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சில் என்றுபெயர்மாற்றம் பெற்றதோடு, புது விதிகளும் புகுத்தப்பட்டன. மண்டேலாவின் ஆட்சியின் பின்னர் நிறவெறி ஒதுக்கல் இல்லாதொழிந்ததால், 1991இல் தென்னாபிரிக்காவுக்கு மீண்டும், முழு அளவிலானஅங்கத்துவம் வழங்கப்பட்டது. 1992இல் 9வது டெஸ்ட் போட்டிகள் விளையாடும் நாடாக, ஆபிரிக்க நாடான சிம்பாவேக்குஅங்கத்துவம் கிடைத்தது. பங்களாதேஷ், 2000மாவது ஆண்டில் பத்தாவது நாடாக அங்கத்துவம் பெற்றுக் கொண்டது. இறுதி வரவுகளாக, இந்தஆண்டு ஆபுகானிஸ்தானும், அயர்லாந்தும் 11வது 12வது நாடுகளாக இணைந்துள்ளன. முழு அங்கத்துவம் பெற்ற நாடுகளின் பட்டியல் இதுதான்!

(வளரும்)

International Cricket Council







சமுத்திரகனி, அதுல்யா, சாம் ஜோன்ஸ், பால சரவணன் ஆகியோரை
த்து "ஏமாலி" படத்தை இயக்குகிறார் வி.சற்.துரை.

இந்தப் படத்தின் டீசர் அண்மையில் வெளியானது. அதில் அதுல்யா
றையில் கவர்ச்சியான உடையுடன் இருந்து புகைப் பிடிக்கும் காட்சி
ியானது.

இது அவரின் ரசிகர்களின் கடும் விமர்சனத்தைப் பெறவே "டீசரில்
ம்பெற்றுள்ள காட்சிகளை வைத்து எனது பாத்திரம் பற்றி தீர்மானித்து
தீர்கள். டீசரில் வெளியான காட்சிகளுக்கு நானும் வருந்துகிறேன்.
க் காட்சிகளை படத்தில் இருந்து நீக்குமாறு இயக்குநரை
டுக்கொள்கிறேன்" என தனது வலைப்பக்கத்தில் தட்டிவிட்டிருக்கிறார்.

விக்ரமின் மகள் அக்ஷிதாவுக்கும் கலைஞரின் கொள்ளுப் பேரன் மனு ரஞ்சித்தும் அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்தனர். திருமண வரவேற்பு நிகழ்ச்சி அண்மையில் நடந்தது.

இந்நிகழ்வுக்குப் பல இடங்களில் இருந்தும் ரசிகர்கள் சென்றிருந்தனர். தனது மகளை வாழ்த்த வந்த ரசிகர்களை மேடையில் ஏற்றி வாழ்த்துச் சொல்ல விக்ரம் அனுமதித்திருந்தார்.

இதன்போது ஓ 'பட்டர்ஃபிளை' பாடலை விக்ரம் பாடினார். இதனால் நிகழ்ச்சி மேலும் கலகலப்பானதாம்.

ஏ.ஆர். முருகதாஸின் இயக்கத்தில் விஜய் நடிக்கும்
த்தின் படப்பிடிப்பு எதிர்வரும் பெப்ரவரியில்
டங்கவுள்ளது.

தீபாவளிக்கு வெளியான மெர்சல் படம்
சைகளுக்கு மத்தியில் பெரு வெற்றி பெற்றிருக்கிறது.
லையில் புதுப்பட அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இன்னமும் பெயரிடப்படாததால் விஜய் 62 என
ழைக்கப்படும் இந்தப் படத்தின் நாயகி யார் என
ன்னமும் அறிவிக்கப்படவில்லை.

## அறிமுகம்

இம்முறை ரஷ்யாவில் நடைபெற்ற கொன்பெடரேசன் உதைபந்தாட்டப் போட்டிகளில் நடுவர்களின் பணியைச் சுலபமாக்க Video Assistant Referees தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் போட்டியில் பெறப்படும் கோல்கள், சிவப்பு அட்டை, பெனால்டி மற்றும் தவறான புரிதல்களால் ஏற்படும் தீர்ப்புக்களை மறுபரிசீலனை செய்வதற்கு இது பயன்படுகின்றது.

கொன்பெடரேசன் தொடரில் இந்தத் தொழில்நுட்பம் வெற்றி அடைந்ததைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளிலும் இதனைப் பயன்படுத்தப் போவதாக பிபா தலைவர் கியானி இன்பன்ரினோ ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்நிலையில் ஸ்பெயின் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரான ஜூவான் லூயிஷ் லாரியா கடந்த வாரம் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் லாலிகா தொடரின் அடுத்தபருவ காலத்தில் இந்தத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும் அறிவித்துள்ளார்.

அடுத்த பருவகாலத்தில் இத்தாலியில் நடைபெறும் சீரி ஏ லீக் தொடரிலும் ஜேர்மனியில் நடைபெறும் புண்டலிஸ்கா லீக் தொடரிலும் இத்தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. இத்தகைய தொழில் நுட்பத்தை பிரேசில், நெதர்லாந்து உட்படப் பல்வேறு நாடுகளும் தற்போது பயன்படுத்தி வருகின்றன.

ஆனால் போட்டிகளின் போது இத்தொழில் நுட்பத்தை வீடியோ உதவி நடுவர்கள் பயன்படுத்தி வந்தாலும் கால விரயத்தை இது ஏற்படுத்துவது விமர்சனத்துக்குள்ளாகி உள்ளது. எனவே விரைந்து தீர்மானங்களை எடுக்கக் கூடிய விதத்தில் இந்தத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம் உதைபந்தாட்ட உலகில் ஆதிக்கம் செலுத்தும் பிறீமியர் லீக் தொடர்களில் ஒன்றான லாலிகா தொடரில் பிபாவினால் அறிமுகப்படுத்தப் படும் அனைத்து தொழில் நுட்பத்தையும் அதன் நிர்வாகம் பயன்படுத்துவதில்லை. அதற்கு உதாரணமாக இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடைபெறும் பிறீமியர் லீக் போட்டிகளில் அவர்கள் பயன்படுத்தி வரும் goal-line technology லாலிகா தொடரில் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்குக் காரணம் அதனைப் பயன்படுத்துவதில் ஏற்படும் அதிக செலவினமே.

ஆனால் தற்போது தொழில் நுட்பம் உதைபந்தாட்டப் போட்டிகளுக்குள் வருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறும் லூயிஷ் லாரியா ஏனைநழ யுளளளைவயவெ சுநகநசநநள தொழில் நுட்பம் லாலிகா தொடரில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் 70 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் பரிசோதிக்கப்பட்ட பின்பே அது அறிமுகப்படுத்தப் படவுள்ளதாகக் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு :- சி.விமலன்

## கௌரவம்

இந்த வருடம் ஜூன் மாதம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் இந்தியாவை தோற்கடித்து கிண்ணம் வென்றமை நாம் அறிந்தது தான். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பாஹர் ஸமனும், ஆட்டத் தொடர் நாயகனாக ஹசன் அலியும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். 1992 ஆம் ஆண்டு மெல்பேர்ண் மைதானத்தில் நடைபெற்ற 5 ஆவது உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் இங்கிலாந்தை தோற்கடித்து கிண்ணம் வென்றதற்குப் பிற்பாடு 50 ஓவர்கள் போட்டியில் பாகிஸ்தான் வென்ற மிகப் பெரிய தொடராக ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணமே விளங்குகின்றது.

அதனால் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தொடரை வென்று நாடு திரும்பிய பாகிஸ்தான் வீரர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் மிகப் பெரிய வரவேற்பும் கௌரவிப்பு நிகழ்வும் நடத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த வாரம் பாகிஸ்தான் அஞ்சல்துறையும் அந்த வெற்றியைக் கௌரவிக்கும் முகமாக சிறப்பு 10 ரூபா , 50 ரூபா முத்திரைகளையும் முத்திரைத் தாள்களை வெளியிட்டுள்ளது. அன்றைய தினம் 50,000 முத்திரைத்தாள்களும் 3,00,000 முத்திரைகளும் அச்சிட்டு வழங்கப்பட்டன என பாகிஸ்தான் அஞ்சல்துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதுபோலவே 1992 ஆம் ஆண்டு பாகிஸ்தான் உலகக் கிண்ணம் வென்றபோதும் பாகிஸ்தான் அஞ்சல்துறை 2 ரூபா, 5 ரூபா, 7 ரூபா பெறுமதியான மூன்று சிறப்பு முத்திரைகளை வெளியிட்டு கௌரவப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




## அழைப்பு

கடந்த வாரம் கேரளாவிற்கு விஜயம் செய்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், கேரள முதலமைச்சர் பினராயி விஜயனை அவரின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடி உள்ளார். எதிர்வரும் 17 ஆம் திகதி இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) உதைபந்தாட்டத் தொடரின் நான்காவது பருவகாலம் கொச்சியில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கு ஆதரவு கோருவதற்கும் ஆரம்ப நிகழ்வில் முதலமைச்சர் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பதற்காகவுமே சச்சின் டெண்டுல்கர் இந்தச் சந்திப்பை மேற்கொண்டுள்ளார். ஐ.எஸ்.எல் போட்டிகளில் விளையாடும் கேரளா பிளாஸ்ரர்ஸ் அணியினது இணை உரிமையாளர்களில் ஒருவராக சச்சின் டெண்டுல்கர் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

ஒருபுறம் ஐ.எஸ்.எல் தொடரால் இந்திய வீரர்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் ஏற்பட்டுவிடப்போதில்லை என்ற கறாரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் இந்தத் தொடருக்கு உதைபந்தாட்ட ரசிகர்களிடம் கிடைத்த வரவேற்பும் அணிகளின் உரிமையாளர்களுக்கு கிடைத்த வணிக ரீதியான லாபமும் இத்தொடரை மேலும் விஸ்தீரணப்படுத்துவதற்கான வாய்ப்பை இயல்பாகவே உருவாக்கி இருந்தது. இதன்விளைவாக 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.எஸ்.எல் தொடரில் இதுவரை நடைபெற்ற மூன்று தொடர்களிலும் எட்டு அணிகளே பங்குபற்றியிருந்த நிலையில் இம்முறை இத்தொடரில் கூடுதலாக பெங்களூரு மற்றும் ஜம்செட்பூர் அணிகளும் உள்வாங்கப் பட்டுள்ளன. இதனால் எதிர்வரும் 17 ஆம் திகதி கொச்சியில் நடைபெறும் கேரளா பிளாஸ்ரர்ஸ் - அத்லெட்ரிகோ கொல்கத்தா அணிகளுக்கிடையிலான முதற்போட்டியுடன் ஆரம்பமாகும் இந்தத் தொடர் அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை நீடித்து இறுதிப்போட்டி கொல்கத்தாவில் நடைபெறுவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 11.11.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.